Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 03 செவ்வாய்க்கிழமை (17.03.2015) பக்கங்கள் 20 ஓசை - 168

அற்புதன் அச்சகம்


அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.



# விக்கி மீது மோடியின் அதிருப்தி



(கொழும்பு)

"ஒரு நாடு இரு தேசம்" என்ற கோட்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் வடக்கு மாகாண முதலமைச்சர் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மைக் காலத்தில் உரையாற்றி, செயற்பட்டு வருகின்றமை தொடர்பில், அவரது பெயரைக் குறிப்பிடாமல் தமது அதிருப்தியை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேரடியாகக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் தெரியப்படுத்தியிருக்கின்றார் என மிக நம்பகரமாக அறிய வருகின்றது.

கொழும்பு வந்திருந்த இந்தியப் பிரதமர் அங்கு வைத்து கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேசிய சமயமே இதனைக் கோடி காட்டினாராம். பேச்சுக்கு நடுவிலே என்னை நம்புகின்றீர்களா என்று சம்பந்தனிடம் நேரடியாகக் கேட்டாராம் இந்தியப் பிரதமர்.

ஆம், நாம் உங்களை பரிபூரணமாக நம்புகின்றோம். நல்ல ஒரு தீர்வை எங்களுக்குப் பெற்றுத் தருவதில் நீங்கள் உறுதியாக உள்ளீர்கள் என்று நாம் நம்புகின்றோம் என்று பதிலளித்தாராம் சம்பந்தர்.

உங்களுக்கு இயன்ற விரைவில் நீதியான தீர்வு கிட்டும் என்பதுதான் எனது ஆழ்மன நம்பிக்கையும் உறுதியும் என்று குறிப்பிட்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மேலும் ஒரு

19 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்; மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராக

(கொழும்பு)

திறைசேரி முறி விற்பனையில் இடம்பெற்ற ஊழல்களுடன் மத்திய வங்கியின் ஆளுநருக்கு தொடர்பிருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை கைது செய்யுமாறு வலியுறுத்தி கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கொழும்பு - கோட்டை மத்திய ரயில் நிலையத்திற்கு முன்பாக நேற்றுப் பகல் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியினால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## காணாமற்போனோர் விவகாரம் இடைக்கால அறிக்கை இன்று

(கொழும்பு)

காணாமற் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் இதுவரையான வேலைத் திட்டம் குறித்த இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம தெரிவித்தார்.

கடந்த மாதம் இவ்வறிக்கை ஜனாதிபதிக்கு கையளிக்கப்படவிருந்தபோதும் அது பிற்போடப்பட்ட நிலையில் அறிக்கை தயாரிக்கும் பணிகள் நிறைவுபெற்றுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாச

19 ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் புதைகுழி தோண்ட உத்தரவு

(மன்னார்)

மன்னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியில் காணப்பட்டிருந்த மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு மன்னார் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்ட பிரதேசத்தில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பகுதியில் 90 இற்கும்

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் முறையில் மாற்றம் பொறிதட்டும் விவாதம் நேற்று

(கொழும்பு)

தேர்தல் முறை மாற்றம் தொடர்பான அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டம் நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இதில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, எதிர்க் கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி.சில்வா உட்பட அனைத்து கட்சிகளினதும் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், செயலாளர் நாயகமும் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹசன் அலி மற்றும் பிரதிச் செயலாளர் நாயகமும் கல்முனை மாநகர முதல்வருமான எம்.நிஸாம் காரியப்பர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இக்கூட்டத்தில் தேர்தல்கள் ஆணையாளர், சட்டமா அதிபர், நில அளவைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆகியோர் விசேடமாக கலந்து கொண்டிருந்தனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மாணவி மீது துஷ்பிரயோகம்


(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவி ஒருவர் கடத்தப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தால் மானிப்பாய் பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அப்பகுதியில் உள்ள பாடசாலையில் உயர்தரத்தில் கற்றுவரும்

19 ஆம் பக்கம் பார்க்க

## இரகசிய முகாம்கள் சாட்சியங்கள் என்னிடம் உண்டு



(கொழும்பு)

இரகசிய முகாம்கள் தொடர்பான சாட்சியங்கள் தன்னிடம் உள்ளதாகவும் சாட்சியங்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டால் அவற்றை வெளிப்படுத்த தான தயார் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடத்தப்பட்டவர்கள், காணாமற்போனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரகசிய முகாம்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்படாமல் அவ்வாறான முகாம் இல்லை என பிரதமரும் நீதியரசரும் கூறுகின்றனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளக விசாரணை உடனடியாக இல்லை

### அது வருட இறுதியில் தான்


(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தகாலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் உரிமை மீறல்கள் தொடர்பான உள்ளக விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படமாட்டாது என்றும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தின் பின்னரே இந்த உள்ளக விசாரணை ஆரம்பிக்கப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட போர் நடைபெற்ற காலத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை

19 ஆம் பக்கம் பார்க்க

# தமது பிரச்சினைகளைத் தீர்க்கக்கோரி நுண்கலைப்பீட மாணவர்கள் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட சித்திரமும்,வடிவமைப்பும் துறை மாணவர்கள் நேற்று மருதனார்மடம், இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் அமைதியான ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டனர்.

அந்த ஆர்ப்பாட்டத்தின் போது, முதலாம் அரை ஆண்டிற்கான செயன்முறை பரீட்சையினை நடாத்துமாறும், அரை ஆண்டிற்கான விரிவுரைகளை ஆரம்பிக்குமாறும், பிரச்சினைகளை தீர்க்குமாறு மூன்று அம்ச கோரிக்கையினை எழுதிய கடிதம் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கடிதத்திற்கான பதிலினை பல்கலைக்கழக நிர்வாகத்தினர் இதுவரையில் வழங்காத நிலையில், சித்திரமும் வடிவமைப்பும் துறை பாடத்தின் செயன்முறை பரீட்சையினை நடாத்துமாறும், இரண்டாம் ஆண்டிற்கான கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறும் வலியுறுத்தி அமைதியான ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

இம்மாணவர்களின் ஆர்ப்பாட்டமானது சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது. இதில் தாம் விடுத்த கோரிக்கையினை பல்கலைக்கழகம் செவிசாய்த்து, கல்வி செயற்பாடுகளை விரைவில் நிறைவு செய்து தருமாறும் கல்விச்செயற்பாடுகளின் காலம் நீடித்து செல்வதாகவும் குற்றஞ் சாட்டினார்கள்.

பல்கலைக்கழக நிர்வாகத்தினரிடம் தமக்குரிய பிரச்சினைகளை தீர்க்குமாறு கோரிக்கை விடுத்ததுடன், அவ்வாறு தீர்க்கபடாவிட்டால், பாரிய போராட்டமாக முன்னெடுக்கவுள்ளதாகவும் மாணவர்கள் மேலும் தெரிவித்தனர். (25)

# மூன்று கடைகள் உடைக்கப்பட்டு நெடுங்கேணியில் கொள்ளை

நெடுங்கேணிச் சந்தியில் நேற்று முன்தினம் இரவு 3 கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இரும்பகம், சிகை அலங்கரிப்பு நிலையம், பல்பொருள் கடை என்பன இவ்வாறு துணிகரமாக கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. நெடுங்கேணிச் சந்தியிலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் செல்லும் வீதியில் அமைந்துள்ள கடைகளே இவ்வாறு உடைக்கப்பட்டு வாகனத்தின் உதவியுடன் பொருட்கள் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையின்போது தெரிக்கப்பட்டுள்ளது.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் நெடுங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (18)

# தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

(வரணி)

வரணி வடக்கு (ஜே.339) கிராம அலுவலர் பிரிவில் இதுவரை காலமும் தேசிய அடையாள அட்டையினை 18 வயதினைப் பூர்த்தி செய்த நிலையிலும் பெற்றுக் கொள்ளாதவர்கள், போதிய ஆவணங்கள் இன்றி தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு சிரமப்படுவோர் தேசிய அடையாள அட்டையினை குறுகிய காலப்பகுதியில் பெறுவதற்கான செயற்றிட்டம் பிரிவில் நடைபெறவுள்ளது.

எனவே, இவ்விடயம் தொடர்பாக தகுதி உடையோர் பின்வரும் நாட்களில் செவ்வாய், வெள்ளி காலை 8.30 மணி தொடக்கம் 11.00 மணி வரை கிராம அலுவலர் அலுவலகத்தில் புதிவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (150)

# கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண் உட்பட இருவருக்கு தண்டம்

கிளிநொச்சி ஊரியான் மற்றும் கல்லாறு ஆகிய பகுதிகளில் கசிப்புடன் கைதுசெய்யப்பட்ட பெண் உட்பட இருவருக்கு சுமார் எண்பதாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் கிளிநொச்சி ஊரியான் 2 ஆம் யுனிற் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின போது கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒருவரை ஒரு போத்தல் கசிப்புடன் கைது செய்தனர். மேற்படி நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நீதவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது குற்றவாளிக்கு நாற்பதாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

அதேபோன்று, நேற்று கல்லாறுப்பகுதியில் பெண்ணொருவரை 375 மில்லி லீற்றர் கசிப்புடன் கைதுசெய்த மதுவரித் திணைக்கள அதிகாரிகள், குறித்த பெண்ணை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இப்பெண்ணுக்கு நாற்பதாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. இதேவேளை, 375 மில்லிலீற்றர் கசிப்பை தன்னுடன் வைத்திருந்த ஒருவரை கைதுசெய்த கிளிநொச்சிப் பொலிஸார், மேற்படி நபரை நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது குறித்த நபரை நாற்பதாயிரம் ரூபாய் காசுப்பிணையிலும் ஒரு இலட்சம் ரூபா சரீர பிணையிலும் செல்லுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# வீதி ஒழுங்குகளை மீறிய மூவருக்கு தண்டம் விதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் வீதி ஒழுங்குகளை மீறி வாகனம் செலுத்திய மூவருக்கு 8 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியில் காப்புறுதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற ஒருவரை கைதுசெய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சி பொலிஸார், நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது மேற்படி நபருக்கு 5ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று கவனயீனமான முறையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப்பாடல்கள்) |
| Am 07.00 | காலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time (Live) |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | தெரிந்தால் சொல்லுங்கள் |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | அதிர்வுகள் |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## கஞ்சா வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

ஒரு கிலோ 500 கிராம் கஞ்சா வைத்தி ருந்த இரு இளைஞர்களை யும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மிருசுவில் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் நேற்று முன்தினம் மிருசுவிலில் இருந்து யாழ்ப்பாணம் பிரதான வீதி மடத்தடி பகுதிக்கு விற்பனைக்காக கஞ்சா கொண்டு வந்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இரு இளைஞர்களும் பஸ்ஸில் இருந்து இறங்கும் போது, நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். கைது செய்யபபட்ட இரு இளைஞர்களும் நேற்று திங்கட்கிழமை யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய வேளை, யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி இருவரையும் எதிர் வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.(25)

சிறு விளம்பரம்

காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் கே.கே.எஸ். வீதிக்கு அருகாமையில் பத்து பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. Te: 0775529904

# மந்திகையில் விபத்து இருவர் படுகாயம்

(கரணவாய்)

மந்திகை ஆலையம்பதி பகுதியில் மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து கடந்த சனியன்று இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் துன்னாலை கரவெட்டியைச் சேர்ந்த இராமகிருஸ்ண குருக்கள் கனகநாதன் (வயது 23). துன்னாலை மேற்கைச் சேர்ந்த இராசன் சுதாகரன் (வயது - 32) ஆகிய இருவருமே படுகாமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (18)

# வான்-மோட்டார் சைக்கிள் விபத்து இரு இளைஞர்கள் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

ஹையஸ் - மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இணுவில் சந்திப்பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பளை நோக்கி பயணித்த ஹையஸ் வாகனமும் சுன்னாகம் பகுதியில் இருந்து இணுவிலை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும், குறுக்கே மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்துச்சம்பவத்தில் பிரபா மற்றும் குணா என்ற இரு இளைஞர்கள் விபத்துக்குள்ளானதில், ஒரு இளைஞரின் கால் முறிந்த நிலையில், இருவர் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (25)

# சந்தைக்கான வீதி மாற்றம் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

## விசனமடையும் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

கே.கே.எஸ்.வீதியில் மருதனார் மடம் சந்தைக்கு செல்லும் பிரதான பாதை புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் வீதியை கடந்து சந்தைக்கு செல்வோர் பல்வேறு பிரச்சினைகளையும் விபத்துக்களையும் எதிர் கொண்டுள்ளதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

முன்னர் சந்தைக்கு செல்லும் பிரதான வாசல் கே.கே.எஸ்.வீதியில் காணப்படும் மஞ்சள் கோட்டு கடவையை அண்மித்தே காணப்பட்டது. ஆனால் தற்போது மஞ்சள் கோட்டு கடவையினை கடந்து சந்தைக்குள் செல்லும் பாதை அமைக்கப்பட்டிருப்பதால் அடிக்கடி விபத்துகளும் நடைபெற்றுவருதாக தெரிவிக்கப்படுகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த விடயத்தில் கவனம் எடுப்பார்களா? எனமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (66)

# அடிப்படை வசதிகளை வழங்குமாறு அடப்பங்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்



(வவுனியா)

வவுனியா, அடப்பங்குளம் கிராமத்துக்கான அடிப்படை வசதிகளை பெற்றுத் தருமாறு கோரி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அடப்பங்குளம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தமது கிராமத்துக்கான அடிப்படை வசதிகளை பெற்றுத்தர வேண்டும், பிரதேச பொது கட்டடத்திலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும், சமுர்த்தி முத்திரை வழங்கலில் பாரபட்சம் காட்டக் கூடாது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷம் எழுப்பினர். நேரியகுளத்திலிருந்து ஊர்வலமாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், அடப்பங்குளம் வரை சென்று அங்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர். சுமார் இரண்டு மணி நேரமாக இவ்வார்ப்பாட்டம் இடம் பெற்றது.

# புகையிலை தோட்டங்களில் பார்த்தீனியச் செடிகளின் ஆக்கிரமிப்பு

மருதனார்மடம், இணுவில், உடும்பிராய் பகுதிகளில் புகையிலை மற்றும் பீற்றூட் பயிர்களுக்குரிய தோட்டங்களில் பார்த்தீனியச் செடி பரவலாக காணப்படுவதால் புகையிலைச் செடிகள் விளைச்சல் குறைந்த நிலையிலும் ஒரு வித நோய்த் தாக்கத்தால் பாதிக்கப்பட்டும் காணப்படுகிறன.

அதே போல் பீற்றூட்டின் விளைச்சலும் குறைவடைந்துள்ளது.


இந்நிலையில் விவசாயிகள் குறித்த பயிர்ச் செய்கையில் நட்டமடைந்த நிலையில் சிலர் இடை நடுவில் குறித்த பயிர்ச் செய்கையை கைவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக வலிகாமப் பிரதேசம் எங்கும் தற்போது பார்த்தீனியச் செடி பரவலாக செழிப்படைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (66)

# உதயசூரியன் சிறுவர் பூங்கா திறப்பு

(யாழ்ப்பாணம்)

வல்வை உதயசூரியன் கழக சிறுவர் பூங்கா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை



மாலை 5 மணிக்கு உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப் பட்டது. திறப்புவிழாவிற்கு வருகை தந்திருந்த விருந்தினர்கள் ஆலயத்தில் இருந்து விக்னேஸ்வரா பாலர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் உதயசூரியன் கழக சிறுவர் பூங்காவிற்கு அழைத்து வரப்பட்டார்கள்.

அமரர் பரஞ்சோதி ஞாபகார்த்தமாக உருவாக்கப்பட்டுள்ள இச் சிறுவர் பூங்காவினை, அமரர் பரஞ்சோதியின் சகோதரர் சோ.ஞானகுரு திறந்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அப்படியா சங்கதி?

■ ம.அய்யம்பிள்ளை

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர் நடைபெற்ற காலப்பகுதியில் அடையாளம் தெரியாதவர்களினால் கடத்தப்பட்டு காணாமற்போனவர்கள் பலர் இலங்கையின் பல இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் இரகசிய தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக எமக்கு இரகசிய தகவல்கள் கிடைத்துள்ளன" என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறி உள்ளார்.

இதோடு மட்டும் அவர் நிற்கவில்லை.

"குறிப்பாக மஹரகம, திருகோணமலை, அம்பாந்தோட்டை போன்ற இடங்களில் இரகசிய முகாம்கள் உள்ளன. அவற்றில் காணாமற் போனவர்கள் பலர் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். இவர்களில் சிலர் படையினரின் சப்பாத்துகளைத் துடைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று எமக்கு சில இரகசிய தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த இரகசிய முகாம்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கும் தெரியப் படுத்தி உள்ளோம்." என்று மிகத்துல்லியமாகச் சொல்கிறார் விக்கினேஸ்வரன்.

**அப்படியா சங்கதி?**

இதைப் படித்தபோது உண்மையில் சந்தோசமாகவே இருக்கிறது. ஏனென்றால், பல ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் உறவினர்கள் எங்கே, அவர்களுக்கு என்ன நடந்தது? அவர்களைப் பற்றிய உண்மையான தகவல்களை எப்படி அறிவது என்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கண்ணீரோடுதான் அவர்களுடைய வாழ்க்கை கழிந்து கொண்டிருக்கிறது.

எந்த ஒரு வெளிநாட்டுக்காரர் வந்தாலும் அவர்களுடைய காலடியில் தங்களின் கண்ணீரைச் சிந்தி முறையிடுகிறார்கள்.

ஆனால் என்னதான் செய்தாலும், எப்படித்தான் அலைந்தாலும் காணாமற் போகடிக்கப்பட்டவர்களைப் பற்றி எந்த ஒரு தவலையும் அறியவே முடியவில்லை.

காணாமற்போகடிக்கப்பட்டவர்கள் உயிரோடிருக்கிறார்களா இல்லையா என்பதைப் பற்றியே அறிய முடியாமலிருக்கிறது.

இப்படியான ஒரு நிலையில்தான் விக்கினேஸ்வரன் இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்.

அதிலும் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகு, இப்படியொரு இனிப்பை விக்கினேஸ்வரன் வழங்கியிருக்கிறார்.

விக்கினேஸ்வரனின் இந்த அறிவிப்பை அடுத்து, தங்கள் உறவுகளைத் தேடிக் களைத்துச் சோர்ந்து போயிருந்தவர்களுக்கு ஒரு தெம்பு பிறந்திருக்கிறது.

இருக்காதா பின்னே, தேடிய சொந்தங்களைப் பற்றிய தகவல் கிடைக்கப்போகிறது என்றால், யாருக்குத்தான் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் பிறக்காது.

ஆனால், விக்கினேஸ்வரன் தெரிவித்திருக்கும் இந்த இரகசிய முகாம்களைப் பற்றிய தகவலும் அதில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அல்லது மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆட்களைப் பற்றிய நிலையும் மெய்யாக இருந்தால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

ஏனென்றால். விக்கினேஸ்வரன் ஒரு பிரதம நீதியரசராக இருந்தவர். அதே வேளை அவர் ஒரு அரசியல்வாதியாக முதலமைச்சர் பதவியில் இருப்பவர்.

இப்படி இரண்டு தகுதிகளை வைத்துக் கொண்டிருக்கும் விக்கினேஸ்வரன் இப்பொழுது இந்த விடயத்தில் செயற்பட்டிருப்பது அரசியல் ரீதியாகவே. அதனால்தான் அவர் இந்த முகாம்கள் தொடர்பான விவகாரத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு தாம் கொண்டு சென்றுள்ளதாகச் சொல்லியிருக்கிறார்.

ஆனால், இதை மறுத்திருக்கிறது அரசாங்கம். ஜனாதிபதி இதைப்பற்றி வாயே திறக்கவில்லை.

ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தின் பங்காளிகளாகவே விக்கினேஸ்வரனின் தரப்பு உள்ளது. தேசிய ஆலோசனைச் சபையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தனும் காணாமற் போகடிக்கப்பட்டோர் தொடர்பாக எப்போதுமே பேசி வரும் மனோகணேசனும் இருக்கிறார்கள்.

இவர்கள் தேசிய ஆலோசனைச் சபையில் இந்த விவகாரத்தைப் பற்றிப் பேசலாம். அதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு கோரலாம்.

ஆனால், அப்படிச் செய்வதற்கான எந்தத் தயாரிப்பையும் காணவில்லை.

அப்படியென்றால் இது தொடர்பாக அடுத்த நடவடிக்கை என்ன?

துல்லியமான தகவல்களை தம்வசம் வைத்திருப்பவர்




விக்கினேஸ்வரன் ஒரு சட்டஅறிஞர் என்றவகையில் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கான நீதியை சட்டத்தின் துணையைப் பயன்படுத்தி எப்படிப் பெறலாம் என்பதை நன்றாக அறிந்தவர்.

ஆகவே இந்த நிலையில் அவர் தனக்குக் கிடைத்திருக்கும் தகவல்களைப் பயன்படுத்தி, அவற்றை ஆதாரமாகக் கொண்டு அந்த மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இதற்காக அவர் நீதிமன்றங்களை நாடலாம். மனித உரிமைகள் அமைப்புகளைப் பயன்படுத்தலாம். சர்வதேச நீதி அமைப்புகளை பயனுள்ள வகையில் முறைப்படி அனுகலாம்.

அப்படிச் செய்வாரா?

கடமை உங்கள் வாசல்கதவைத்தட்டும் போது உடனே உள்ளே அழையுங்கள். காக்க வைத்தீர்களோ, அது புறப்பட்டுப்போய் இன்னும் ஏழு கடமைகளை அழைத்து வந்துவிடும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மோடி விஜயமும் 'தமிழ் ராசதந்திர'மும்!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கும் விசேடமாக யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்திருந்ததை, பெரும்பான்மைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகப் பார்க்கப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு பயன்படுத்திக் கொண்டது? என்ற கேள்வி நமக்கு உண்டு.

த.தே.கூ. வின் தலைவர் என்ன சொல்கிறார் பாருங்கள்: "தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய தேவை தொடர்பாக கவனத்தை செலுத்துவதற்கான தன்மையைக் கொண்டிருக்கும் காலத்துக்குத் தேவையான விஜயமாக இது அமைந்திருக்கிறது" என்று ஒரு சுழட்டு சுழட்டி விட்டிருக்கிறார் தலைவர்!

தீர்வு காண வேண்டிய தேவை தொடர்பாக யார் கவனத்தைச் செலுத்தவிருக்கிறார்கள்? அந்த கவனம் இனிமேல்தானா ஆரம்பிக்கப்படவிருக்கிறது? என்னமாதிரியான கவனம் அது? எப்போது அந்த கவனிப்பு நிகழவிருக்கிறது?

தலைவர் அப்படி மையமாக எதையோ அடித்து விடுகிறார் என்றால், அவருக்குப் போட்டியாக அதிதீவிரவாதி வேடத்துடன் புறப்பட்டிருக்கும் வடக்கின் முதலமைச்சர், "இலங்கையில் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் எமக்கான உரிமை மற்றும் போர்க்குற்ற விசாரணை விடயங்களில் நாம் சில காலம் இந்தியாவின் விருப்பம் போல பொறுமையுடன் காத்திருப்போம்" என்கிறார்.

சில காலம் பொறுமை என்பது நாடாளுமன்றத் தேர்தலை முடித்தபிறகு எவ்வளவு காலம் வரைக்கும்? இந்தியாவின் விருப்பத்திற்காகக் காத்திருப்பது என்றால், பொதுத் தேர்தல் முடிந்தபிறகு வடக்கு கிழக்கு இணைந்த தன்னாட்சித் தனியலகை எடுத்துத் தந்துவிடுவதாக மோடி உறுதியேதும் தந்திருக்கிறாரா என்ன?

"அவர் வருகைக்கு முன்னர் இருந்ததைவிட, மோடி அவர்கள் இங்கு வந்து சென்றதன் பின்னர், இந்தியாவிடம் எங்கள் நம்பிக்கை கூடியுள்ளது" என்றும் விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

அப்படி அவர் தங்களுக்கு அளித்துச் சென்றது என்னமாதிரியான நம்பிக்கை என்பதைச் சிறிது கோடிகாட்டியாவது தமிழ் மக்களுக்கும் அந்த சந்தோசத்தில் கொஞ்சத்தைத் தரக்கூடாதா?

இனிவரும் தேர்தல்களையும் எல்லாம் வெல்வதற்கு உதவியாக, இலங்கையில் அடுத்தடுத்து வரும் அரசுகளுக்கும் வாயளவில் தொடர்ந்து சவால்களை விட்டுக்கொண்டிருக்க வசதியாக, "13வது திருத்தம்... அரசுடன் பேசுங்கள்" என்றெல்லாம் ஆய்க்கினைப் பண்ணாமல் விடுகிறேன் என்ற நம்பிக்கையைத் தந்தாரா மோடி?

தானாக வந்த மோடியை வீணாகப் போக விட்டுவிட்டு அந்த வங்குரோத்தை மறைக்க தமிழரசுக் கட்சிப் பத்திரிகை எப்படிச் "சுத்துகிறது" பாருங்கள்:

"எங்கே, எதை வைத்து புதிய அரசை வீழ்த்தலாம் – அதன் மூலம் தோற்றுப்போன மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பதவியில் அமர்த்தலாம் என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் குழுமங்கள் தலைதூக்க விடக்கூடாதல்லவா? எனவேதான், இந்தியத் தலைவர் இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவாக இருப்போம் என்றார்."

இந்த இடத்தில்தான் தமிழ் மக்களுக்குப் புல்லரிக்க வேண்டும்! இந்தியத் தலைவர் இலங்கை அரசுக்கு ஆதரவாகப் பேசிவிட்டுப் போகிறாரே என்று தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்து விட வேண்டாமாம்! அவர் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பேசப்போய் மகிந்த திரும்ப வருவதற்கு வழிசமைத்து விடலாமா?

மற்றபடி, இந்தியாவும் சர்வதேசமும் தமிழ் மக்களுக்கான தீர்வை எடுத்துத் தருவதில்தான் முனைப்பாக இருக்கின்றன. இந்த மகிந்த மீண்டும் பதவிக்கு வந்துவிடாதபடி நிரந்தரமாக முடங்கட்டும்.... அதுவரை இந்தியாவின் விருப்பம் போல நாம் மேலும் காத்திருப்போம்!

- ஆசிரியர்

# அரசியல் எதிர்காலம் குறித்து தீர்மானிக்கவில்லை

### சுவர்ணமாலி எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் எதிர்காலம் பற்றி தீர்மானிக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் உபேக்ஸா சுவர்ணமாலி தெரிவித்துள்ளார்.

19 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றேன். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சியில் போட்டியிடுவது என்பது குறித்து தீர்மானிக்கவில்லை.

பொறுப்பு வாய்ந்த அரசியல்வாதி என்ற ரீதியில் 19 ஆம் திருத்தச் சட்டம் குறித்து கவனம் செலுத்தப்படும். உத்தேச சட்டத்தை வாசித்து ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டியிருந்தால் அது குறித்து குரல் கொடுப்பேன்.

தேர்தல் அறிவிக்கப்படாத நிலையில் எந்தக் கட்சியில் போட்டியிடுவது என்பது பற்றி தற்போது தீர்மானிக்க வேண்டியதில்லை என்றார். 2010 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட சுவர்ணமாலி, பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இணைந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# போலி ஆவணங்களை சமர்ப்பித்து இத்தாலி செல்லமுயன்றவர்கள் கைது

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி இத்தாலிக்குச் செல்ல முயற்சித்த வடக்கைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இளைஞர்கள் இருவரும் தலா இரண்டு கடவுச்சீட்டுக்களை வைத்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பஹ்ரெய்ன் ஊடாக இவர்கள் இத்தாலி செல்ல முயற்சித்துள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு குறித்த இளைஞர்களை கட்டுநாயக்க விமான நிலைய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தின் ஊடாக மிஹின் ஏயார் விமானம் ஒன்றின் ஊடாக இவர்கள் இத்தாலி செல்ல முயற்சித்திருந்தனர். ஆவணங்களை பரிசோதனை செய்த போது ஒவ்வொரு இளைஞரிடமும் இரண்டு கடவுச்சீட்டுக்கள் காணப்பட்டமை கண்டறியப்பட்டது.

பழைய கடவுச்சீட்டை காணவில்லை எனத் தெரிவித்து புதிய கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டுள்ளனர். புதிய கடவுச்சீட்டுக்கு பஹ்ரெய்ன் விசா பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் பழைய கடவுச்சீட்டில் போலி இத்தாலி விசா ஒட்டப்பட்டுள்ளது.

பஹ்ரெய்ன் சென்று அங்கிருந்து போலி விசா ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட பழைய கடவுச்சீட்டை பயன்படுத்தி இத்தாலி செல்ல இந்த இளைஞர்கள் திட்டமிட்டிருந்தமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. சந்தேக நபர்கள் இருவரும் நீர்கொழும்பு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளனர்.

# சுதந்திரக் கட்சியின் தலையீட்டால் அரசியல் கட்சிகளில் பிளவு

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலையீடு காரணமாக கடந்த காலங்களில் பாரிய அரசியல் கட்சிகள் பிளவுபட்டுள்ளன என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

ருவான்வெல்ல .பகுதியில் ஐ.தே.க.வுக்கு ஆதரவாளர்களை இணைக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய நிலைமை தன்வினை தன்னைச் சுடும் என்பதை உணர்த்துகிறது.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபட்டுள்ள நிலையில் பலர் அக்கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்றி ஆட்சிக்கு வர முனைகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 19 ஆவது திருத்தச்சட்டம் பொதுமக்கள் விளக்கம் கோர வாய்ப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்த சட்டமூல வரைபு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பின்னர் அதன் அரசியலமைப்பு நிலைப்பாடு குறித்து உயர் நீதிமன்றத்தின் ஊடாக விளக்கம் கோருவதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்பு இருப்பதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற உத்தேச அரசியலமைப்பு திருத்த சட்டமூல வரைபு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த சட்டமூல வரைபை நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையின் ஊடாக நிறைவேற்றுவதா, அல்லது சர்வஜன வாக்கெடுப்புக்கு விடுவதாக என்பது குறித்து உயர் நீதிமன்றம் விளக்கமளிக்கும் என அஜித் பி பெரேரா குறிப்பிட்டார்.

# விமல் வீரவன்சவை துரத்தும் முறைப்பாடுகள்

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிரான முறைப்பாடு ஒன்றை தெரிவிப்பதற்காக கடுவெல நகராதிபதி ஜி.எச்.புத்ததாச நேற்று குற்றவிசாரணை திணைக்களத்தில் முன்னிலையானார்.

முன்னாள் அமைச்சரின் மனைவி சசி வீரவன்ச முறையற்ற வகையில் கடவுச் சீட்டுகளை தயாரிப்பதற்கு உடந்தையாக செயற்பட்டமையால் விமல் வீரவன்சவை கைது செய்ய வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

போலியான தகவல்களை குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு வழங்கி முறையற்ற வகையில் கடவுச் சீட்டுகளை பெற்றுக்கொண்டமை காரணமாக சசி வீரவன்ச கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

அவர் கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

# சிறுமி கடத்தல் விவகாரம் சேறுபூசும் நடவடிக்கை

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

தமது வயது குறைந்த மகளை அமைச்சர் ராஜித சேனாரட்னவின் மகன் கடத்திச் சென்றதாக தாய் ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

தமது மகளை அமைச்சரின் மகன் கடத்திச் சென்றமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தாய் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் அமைச்சருக்கும் அவருடைய மனைவிக்கும் தெரியும் என்று தாய் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கடத்தப்பட்டதாக கூறப்பட்ட மகளின் தந்தையும் ராஜித சேனாரட்னவும் ஒரு காலத்தில் நல்ல நண்பர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுமி ஒருவரை பலவந்தமான முறையில் தமது மகன் தடுத்து வைத்திருப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். எனது மகனின் பெயரைப் பயன்படுத்தி சேறு பூசல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் இதனை விடவும் அதிகளவில் சேறு பூசல்கள் இடம்பெறக்கூடும் நல்ல பெற்றோர் இவ்வாறான விடயங்களை ஊடக சந்திப்புக்களை கூட்டி மக்களுக்கு வெளிப்படுத்த மாட்டார்கள் என்றார்.

# அண்ட் ஸ்டில் தி எர்த் (And Still The Earth)

## ஒரு வாசிப்பனுபவம்

**லாவண்யா**

**காலையில்** சேவல் கூவுவதைக் கேட்டு எழுந்திருப்பது உங்கள் வழக்கம். ஆனால் கிராமமாயிருந்த உங்கள் ஊர் பெருநகரமாகி விட்டது. ஒரு சேவல் கூட இல்லை. தொலைக்காட்சி விளம்பரங்களிலிருந்து சேவல் கூவும் ஒலியைப் பதிவு செய்து, அந்த ஒலிப்பதிவைக் கேட்டபிறகு எழுந்திருக்கிறீர்கள். கடந்த காலத்திலிருந்து உங்களால் மீள முடியவில்லை.

பல் தேய்க்க வேண்டும். தண்ணீர் பற்றாக்குறை. அரசாங்கம் தண்ணீருக்கு கூப்பன்கள் தந்திருக்கிறது. ஆனால் உங்களுக் குண்டான தண்ணீர் களவு போய்விடுகிறது. சிந்தட்டிக் நெல்லிச்சாறில் வாய் கொப்பளிக்கிறீர்கள்.

புரட்சிக்காரர்களைப் பற்றிய தகவலை இராணுவத்துக்குக் கொடுத்தால் இன்னும் அதிக தண்ணீர் கூப்பன் களைப் பெறலாம். புரட்சிக் காரர்கள் நடுத்தெருவில் சுடப்படுவார்கள். தர்மசங்கடம் என்னவென்றால் அவர்கள் உண்மையில் புரட்சிக்காரர்களல்ல. தாகத்துக்குத் தண்ணீர் கேட்டு அரசுக்கெதிராக மறியல் செய்பவர்கள்.

உங்கள் வீடு இராணுவத் தால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறீர்கள். இராணுவம் சொல்கிறது. எல்லாருடைய வீடும் எங்கள் வீடுதான். உங்களுக்குப் பசிக்கிறது. ஃப்ரிட்ஜில் ருசிகரமான அசைவ உணவு ஏதுமில்லை. அசைவ உணவு சமைக்க நாட்டில் ஆடு மாடு கோழியென மிருகங்களே இல்லை. காலப் பிரவாகத்தில் அவை எப்போது காணாமல் போனதென்று தெரியவில்லை.

அதை விட வேடிக்கை, சமையலறையிலிருந்த உங்கள் மனைவி எப்போது காணாமல் போனாளென்றும் உங்களுக்குத் தெரியவில்லை. உங்களுக்குப் பசிக்கிறது. ஃப்ரிட்ஜில் எருமைப்பால் அல்லது பசும்பால் இருக்க வாய்ப்பில்லை. கடைகளில் தாய்ப்பால் மட்டுமே விற் கிறார்கள்.

சிந்தட்டிக் கோதுமை மா, செயற்கை வெண்ணெய் கலந்து சிந்தட்டிக் கேக் சாப்பிடலாம். ஆனால் சமையலறையில் பிணநாற்றம். உங்களுக்கு முடிவெட்டும் நாவிதரைச் சேர்த்து மொத்தம் நான்கு பிணங்களிருக்கின்றன. இராணுவ அதிகாரி மூன்று பிணங்கள்தானென்று வாதிடுகிறார்.





நீங்கள் ஒரு தோத்தாங்குளியென்று உங்களுக்குப் புரிகிறது. இராணுவ அதிகாரியுடன் வாதிடுவதற்குப் பதிலாக காணாமற்போன உங்கள் மனைவியைத் தேடலாமென்று நினைக்கிறீர்கள். முப்பது வருடம் நாள் தவறாமல் படுக்கச் செல்லுமுன் நீங்கள் முத்தமிட்ட,, உங்களுக்கு முத்தம் தந்த மனைவி சொல்லாமல் கொள்ளாமல் காணாமல்போனால் நீங்கள் எங்கு போய் தேடுவீர்கள்? சா பாலோ மிகப் பெரிய நகரம். அதன் எல்லா இடங்களுக்கும் செல்ல உங்களுக்கு அனுமதியில்லை.

உங்கள் பெயர் சௌசா. சா பாலோ பல் கலைக்கழகத்தில் நீங்கள் வரலாற்றுப் பேராசிரியாயிருந்தீர்கள் ஆனால் அரசியல் படிக்கும் இடதுசாரி சார்புடைய மாணவர்கள் அரசுக்கு அசௌகரியமான கேள்விகளைக் கேட்க அனுமதித்தீர்கள். அத்ற்கு பதில்களும் சொன்னீர்கள். உங்களை எளிதில் அடையாளம் கண்டு கொள்ள அரசால் முடியும்.

ஏனென்றால் உங்கள் உள்ளங்கையில் ஒரு பெரும் ஓட்டை இருக்கிறது. (அது சம்பளங்கள் குறைக்கப்பட்டபோது உங்கள் கையில் ஏற்பட்டிருக்கலாம்) நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பதால் (உளவுத்துறைக்கு கிடைத்த தகவலின்படி) கட்டாய ஓய்வு கொடுத்து உங்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள்.

உங்களைப்போலவே உயிரியல் பேராசிரியர் டேடோ பெரைராவுக்கும் சீட்டைக் கிழித்துவிட்டார்கள். டேடோ பெரைரா லிப்ட்இயக்குபவராக வேலை பார்த்து வாழ்க்கைக்கு ஒரு அர்த்தமுமில்லை அல்லது மரணம்தான் வாழ்க்கையின் அர்த்தமென்று நினைத்து தற்கொலை செய்து கொண்டுவிடுகிறார். உங்களுக்கு அதற்கும் தைரியமில்லை.

தொலைக்காட்சி சலித் துப்போன ஒரு நாள் எப்போதோ காணாமல் போன உங்கள் அன்புக்குரிய மனைவியைத் தேடிப்போகிறீர்கள். பேருந்து தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ஒரு புறம். போக்குவரத்து நெரிசல் ஒருபுறம்.. வீதிகளில் நிற்க இடமில்லை. சனநெரிசல். மண்டை பிளக்கும் வெயில். குடலைத் தின்னும் பசி. குமட்டும் வியர்வை வாடை.

உங்களுக்கு முன்னால் நிற்கும் எலிசாவிடம் தகாதமுறையில் நடக்க முற்படுகிறீர்கள். எலிசா வசைபாடுகிறாள்....

நடுத்தெருவில் முறைகேடாய் நடந்து கொண்டதற்காக நீங்களும் எலிசாவும் தேசப்பாதுகாப்பு சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுகிறீர்கள். எலிசா சிறைக்குச் செல்கிறாள். பிறகு காணாமல் போனாளென்ற தகவல். நீங்கள் ஒரு பேராசிரியரென்பதால் பல சிறைகளுக்கு மாற்றப்பட்டு விடுதலையாகிறீர்கள்.

இப்போதுதான் உங்களுக்கு உங்கள் மனைவியின் ஞாபகம் வருகிறது. திங்கட்கிழமை நுகர்வோர் தினம். பொருளாதாரத் தேக்கம் வராதிருக்க மக்கள் அனைவரும் அரசு குறிப்பிடும் கடைகளில் பொருட்களை வாங்கவேண்டும். அதற்கான சான்றிதழை மாதம் ஒரு முறை அரசு அலுவலகத்தில் பெற வேண்டும். இல்லையேல் உங்கள் பெயர் இறந்தவர் கணக்கில் சேர்க்கப்படும்.

உங்கள் மனைவி அந்தச் சான்றிழுக்காக அரசு அலுவலகம் சென்றார்.. அவரைத் தேடி நீங்களும் அரசு அலுவலகத்துக்குச் செல்கிறீர்கள். 200 வருடங்களுக்குத் திறக்கவேண்டாமென்று குறிக்கப்பட்டு குப்பையாகக் கிடக்கும் அரசுக் கோப்புகளிலிருந்து உங்கள் மனைவி அடிலையிட் வெளியே வருகிறார்....

பிரேசிலில் மழையே இல்லை. ஆனால் சினிமாவில் மழை பெய்கிறது. மழை இல்லாததால் உணவுக்கு வழியில்லை. பயிர்கள் குளிர்பதனம் செய்யப்பட்ட பச்சைநிற வீடுகளின் மாடிகளில் மட்டுமே பயிர்செய்யப்படுகின்றன. காடுகள் முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டன. மரங்கள் அரசாங்கத்தால் விற்கப்பட்டு விட்டன. தாங்க முடியாத சூரிய வெப்பம். குடிக்கத் தண்ணீர், புசிக்கப் புல்லுமில்லாத சா பாலோ நகரில் உங்கள் நண்பர் டேடோ பெரைராவின் குதிரை சூரியசக்தியால் ஓடியதென்பது இப்போதுதான் உங்கள் மரமண்டைக்கு எட்டுகிறது.

சூரியவெப்பம் சா பாலோ நகரத்தையே ஓர் உலைக்களமாக மாற்றிவிடுகிறது. வெப்பம், தாகம் தாங்க முடியாமல் பலரும் இறந்துபோகிறார்கள். நிழலை நோக்கி ஓடுகிறார்கள். உயிர் வாழும் ஆசை எந்தச் சூழலிலும் மனிதனைவிட்டு நீங்காதல்லவா?

நீங்களும் வெப்பமயமாதலில் கருகிச் சாகாதிருக்க நிழலைத்தேடி ஓடுகிறீர்கள். வழிநெடுக விளம்பரப் பலகைகள் கண்ணைப் பறிக்கின்றன.

**"சிஸ்டம் பெருமையுடன் வழங்குகிறது. வெப்பமயமாதலிலிருந்து அனைவருக்கும் பாதுகாப்பு - மார்க்வீ" பிரம்மாண்ட நிழற்கூரை-சமூகநல அமைச்சகத்தின் மாபெரும் சாதனை...."**

சனநெரிசலில் திக்குமுக்காடும் நீங்கள் நிழற்கூரையை அடையும் நம்பிக்கையை இழந்துவிடுகிறீர்கள்...

**'நரகத்தின் வாசற்படியில் நிற்கும்போதுகூட ஒரு மனிதனுக்கு விமோசனம் கிடைக்கலாம்., நம்பிக்கையிழக்காதே...'**

சிறு வயதில் உங்கள் தாய் உங்களுக்குச் சொன்னதை நம்ப விரும்புகிறீர்கள். ஆனால் உங்களால் நம்பமுடியவில்லை,...

*** *** ***

பிரேசிலின் இக்னேஷியோ லொயோலா ப்ராண்டோ (Ignacio de Loyola Brandao) போர்ச்சுகீசிய மொழியில் எழுதி 1981இல் பிரசுரமான And Still The Earth என்ற தலைப்பிட்ட ஒரு டிஸ்டோபியன் நாவலின் சுருக்கம் இது. (விரும்பத்தகாத ஒரு சூழலில் மக்கள் படும் அவலங்களை நிகழையும் எதிர் காலத்தையும், நிகழ்வையும் கற்பனையும் கலந்து புனையப்படுவதே டிஸ்டோபியன் நாவல். "ஜோர்ஜ் ஓர்வெல்லின் 1984, அல்டஸ் ஹக்ஸ்லியின் Brave New World போன்றவை)

1961-1985 வரை பிரேசிலில் ராணுவ ஆட்சி நடைபெற்றது. அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற தொலைக்காட்சிகளின் அரசியல் பிரச்சாரம், தொழிலாளர் களுக்கெதிரான ஊதியக் குறைப்பு, அடக்குமுறை, விஞ்ஞானிகள், சிந்தனையாளர்களை அச்சுறுத்திய வதைமுகாம்கள், நுகர்வுக் கலாச்சாரம், மனிதமிழந்த மனித உறவுகள் அனைத்தும் மக்களின் வாழ்க்கையை அர்த்தமற்றதாக்கி விடுகிறது.

பேராசிரியர்கள் சௌசாவும் பெரைராவும் அவர்களில் இருவர். அவர்கள் எங்கேனும் தப்பித்துச் செல்ல விரும்புகிறார்கள். பெரைரா அவல மும் அவசங்களும் நிறைந்த வாழ்க்கையிலிருந்து தப்பிக்க மரணத்தைத் தழுவுகிறார்.

சௌசாவால் தன்னைச் சுற்றி நிகழ்வது உண்மையா அல்லது தன்னுடைய பிரமையா என்பதையே தீர்மானிக்கமுடியாமல் திண்டாடுகிறார். - சா பாலோ நகரத்து எல்லா மக்களையும் போல...

மொத்தம் ஏழெட்டு கதாபாத்திரங்கள்தான். பல இடங்களில் அவர்களின் உரையாடலும் மன ஓட்டமும் அடுத்தடுத்து எழுதப்பட்டுள்ளது. உணவு, உறவு, தொடங்கி நம் வாழ்வின் அனைத்து அம்சங்களும் செயற்கையாகி விட்டதை, யந்திரமயமாகி விட்டதை. நாம் வாழ்வின் வெப்பம் தாங்கமுடியாமல் தவிப்பதை, நாம் மூச்சுத் திணறிக் கொண்டிருப்பதை மிகையதார்த்தம், நகைச்சுவை, அங்கதம், எள்ளலென்று பலவேறு விதமாகப் படம் பிடித்திருக்கிறார் பிராண்டோ. - இந்தப் புத்தகம் நிச்சயம் தமிழ் இலக்கிய ஆர்வலர்களைக் கவரும்.




**சூரியவெப்பம் சா பாலோ நகரத்தையே ஓர் உலைக்களமாக மாற்றிவிடுகிறது. வெப்பம், தாகம் தாங்க முடியாமல் பலரும் இறந்துபோகிறார்கள். நிழலை நோக்கி ஓடுகிறார்கள். உயிர் வாழும் ஆசை எந்தச் சூழலிலும் மனிதனைவிட்டு நீங்காதல்லவா?**

**நீங்களும் வெப்பமயமாதலில் கருகிச் சாகாதிருக்க நிழலைத்தேடி ஓடுகிறீர்கள். வழிநெடுக விளம்பரப்பலகைகள் கண்ணைப் பறிக்கின்றன. 'சிஸ்டம் பெருமையுடன் வழங்குகிறது. வெப்பமயமாதலிலிருந்து அனைவருக்கும் பாதுகாப்பு - மார்க்வீ- பிரம்மாண்ட நிழற்கூரை-சமூகநல அமைச்சகத்தின் மாபெரும் சாதனை....' சனநெரிசலில் திக்குமுக்காடும் நீங்கள் நிழற்கூரையை அடையும் நம்பிக்கையை இழந்துவிடுகிறீர்கள்...**

# சர்வதேச விசாரணையை எதிர்ப்பதில் ஐக்கியமாகியுள்ளது இலங்கை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை உள்நாட்டு யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்த குற்ற மீறல்கள் குறித்த சர்வதேச விசாரணையை எதிர்ப்பதில் இலங்கை ஐக்கியப்பட்டுள்ளதாக முன்னாள ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



டுபாயில் நடைபெற்று வரும் கல்வி மாநாடு ஒன்றில் கலந்துகொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க 'IBTimes UK' என்ற ஊடகத்திற்கு அளித்துள்ள விசேட பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணையை முழு நாடும் எதிர்ப்பதாகவும் உள்விவகாரத்தில் வெளித் தலையீட்டை அவமானமாக கருதுவதாகவும் சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

போர்க்குற்ற ஆதாரங்கள் தொடரபான காட்சிகளை நம்பவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ள கருதது தொடர்பில் சந்திக்கா கூறுகையில், ஜனாதிபதி தவறாக புரிந்துகொண்டுள்ளார் என்றும் ஆவணத் தயாரிப்பாளர்கள் ஆதாரத்தை காண்பிக்கும் போது விசாரணையாளர்களிடம் ஆவணங்கள் கையளிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஆவணங்கள் முன்வைக்கப் பட்டால் ஜனாதிபதி அதனை ப்பார்வையிட முடியும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

# நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெற முயல்வோம்

## பிரதமர் ரணில் நம்பிக்கை



எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மையை பெறுவதற்கு முயலப்போவதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். எனினும் தேர்தலுக்குப் பின்னர் தேசிய அரசை அமைப்பதற்கே தனது கட்சி விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் பான்மையை பெற முயலவேண்டும். நாட்டின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பதற்கு தேசிய அரசை அமைப்போம் என ஐக்கிய தேசியக் கட்சியால் பல தடைகளை தாண்டி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க முயன்றோம் எனவே பொதுத்தேர்தலை எதிர்கொள்ள தயாராகவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி பாரிய அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபட்ட பல நிறுவனங்களிடமிருந்து இலஞ்சம் பெற்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுதந்திரக்கட்சியில் பெரும்பான்மையினர் மகிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவு

## காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவளிப்பதாக காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிசாந்த முத்துஹெட்டிகேகம தெரிவித்துள்ளார்.

காலியில் ஒன்றுகூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் வைத்து அவர் இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 4 நாடாளுமன்ற உறுப்பினர்களும் 40 பிரதிநிதிகளும் பங்கேற்றனர். இதன்போது மேலும் உரையாற்றிய முத்துஹெட்டிகம, மக்களால் நிராகரிக்கப்படுவதற்கு மகிந்த ராஜபக்ஷ அரசியல்வாதியல்ல என்றும் குறிப்பிட்டார்.



எனவே மகிந்த ராஜபக்ஷவை கொழும்புக்கு கொண்டு வந்து, தேர்தலில் போட்டியிட, வேட்பாளர் நிலையை பெற்றுக்கொடுக்க அனைவரையும் அழைப்பதாக அவர் இதன்போது தெரிவித்தார்.

# ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுகள் மீட்பு

ஒரு கோடி ரூபாவிற்கும் அதிகம பெறுமதியான தங்க பிஸ்கட்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் மீட்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினருககு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் குறித்த தங்க பிஸ்கட்கள் மீட்கப்பட்டுள்ளன.

எச்.சி 782 விமானத்தில் பயணிக்கவிருந்த இரண்டு பயணிகளின் பயணப் பையை சோதனை செய்தபோது 2 கிலோ 521 கிராம் நிறையுடைய 20 தங்க பிஸ்கட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன் பெறுமதி ஒரு கோடி 30 இலட்சத்திற்கும் அதிகம் என சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த தங்க பிஸ்கட்களை வைத்திருந்த மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த 39, 40 வயதுடைய இருவர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக மீட்கப்பட்ட தங்கத்துடன் இரு சந்தேக நபர்களும் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# உயிரிழந்த இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு வீடமைப்புத்திட்டம்

(கொழும்பு)

போரில் உயிர் நீத்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்காக விசேட வீடமைப்பு திட்டமொன்றை இராணுவம் அறிமுகம் செய்ய உள்ளது.

போரில் உயிர் நீத்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட உள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் கிருஸாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரில் உயிரிழந்த படைவீரர்களின் சில குடும்பங்களுக்கு இதுவரையில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

அவ்வாறான குடும்பங்கள் குறித்து கண்டறிந்து துரித கதியில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளது.

உயிரிழந்த படைவீரர் கடமையாற்றிய படைப் பிரிவு வீடுகளை அமைப்பதற்கு 75 வீத பங்களிப்பினை வழங்கும் எனவும் மிகுதி 25 வீதத்தை உயிரிழந்த படைவீரரின் குடும்ப உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

# தாமரைக் கோபுர நிர்மாணம் மீளாய்வு



(கொழும்பு)

சீனாவின் முதலீட்டில் மேற்கொள்ளப்படும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டு சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் நிலையில், சீனாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும், தாமரைக் கோபுர நிர்மாணப் பணி குறித்தும் மீளாய்வு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையன் துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் இதுகுறித்து கருத்து வெளியிடுகையில்,

தாமரைக் கோபுரம் போன்ற கோபுரம், இலங்கைக்குத் தேவையில்லை. இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து இந்தத் திட்டம் குறித்துப் பேசவுள்ளதுடன், இதனை மீளாய்வு செய்யுமாறும் கோரவுள்ளேன்.

இந்த கோபுரம், துறைமுக அதிகாரசபையின் காணியில் அமைக்கப்படுகிறது. ஆனால், துறைமுக அதிகாரசபையிடம் இதற்கான முறைப்படியான அனுமதிகள் பெறப்படவில்லை. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்த தாமரைக் கோபுரம, பேலியகொடவில் அமைக்கத் திட்டமிடப்பட்டது. பின்னர், முன்னைய அரசாங்கம் அதனைக் கொழும்புக்கு இடமாற்றம் செய்திருந்தது. தாமரை வடிவில், தொடர்பாடல், கண்காணிப்பு, மற்றும் பொழுதுபோக்கு வசதிகளுடன் கூடியதாக அமைக்கப்படவுள்ள இந்தக் கோபுரத்தை, சீனாவின் எக்சிம் வங்கி 104.3 மில்லியன் செலவில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

## அரச ஊழியர்களின்

# பண்டிகை கொடுப்பனவு 10,000 ரூபாவாக உயர்வு

(கொழும்பு)

அரச ஊழியர்களின் பண்டிகை முற்கொடுப்பனவு 10,000 ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது என பொதுநிர்வாக அமைச்சர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கு தற்போது பண்டிகை முற்கொடுப்பனவாக 5000 ரூபவே வழங்கப்படுகின்றது. அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்கள் மற்றும் ஆடைகளின் விலைகளை கருத்திற்கொண்டு பணடிகை முற்பணத் தொகையை உயர்த்துமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்தன.

இதுவரை வழங்கப்பட்ட 5000 ரூபாவனை 10,000 ரூபா வரையில் உயர்த்துமாறு கோரப்பட்டதாகவும் அந்தக் கோரிக்கையை அமைச்சர் ஏற்றுக்கொண்டதாகவும் அரச தனியார் தொழிற்சங்க பேரவையின் அழைப்பாளர் சமன் ரத்னப்பிரிய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த முற்பணத் தொகை பத்து மாதங்களில் மீள அறவீடு செய்யப்பட உள்ளது. எதிர்வரும் சித்திரை புத்தாண்டு காலத்தில் இந்த பண்டிகை முற்கொடுப்பனவு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



யாழ்.கொட்டடி சனசமூக நிலையமும் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடாத்திய சர்வதேச மகளிர் தின விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நிலைய கட்டடத்தில் நடைபெற்றபோது. (105)

# தர்மம் செய்தார் முதலமைச்சர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பேருந்துநிலையம் வந்த வடமாகாண முதலமைச்சர் அங்கு தர்மம் கேட்ட வயோதிப மாதுவுக்கு தர்மம் வழங்கினார்.

பேருந்து வழங்கும் நிகழ்வில் கலந்து விட்டு தரிப்பிடத்திலிருந்து வாகனத்தில் செல்ல முற்பட்ட போது வயிற்றுப் பசியைப் போக்க வாகனத்தில் இருந்த முதலமைச்சரை தர்மம் செய்யுமாறு கேட்ட வயோதிபப் பெண்ணுக்கு வாகனத்தை நிறுத்தி தர்மம் வழங்கியுள்ளார். (இ)

# பேருந்து வழங்கும் நிகழ்வுக்காக
# தடைப்பட்ட போக்குவரத்து சேவைகள்

## பாதிப்படைந்த மக்கள் விசனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.சாலைகளுக்காக வழங்கப்பட்ட 20 பேருந்துகளை சேவையிலீடுபடுத்துவதற்காக பிரதியமைசசர் விஜயகலா மகேஸ்வரனினால் யாழ்.பேருந்து தரிப்பிடத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவினால் போக்குவரத்துச் சேவைகள் 3 மணிநேரம் பாதிப்படைந்தமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதுடன் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கான பேருந்துகளுக்காக காத்து நிற்றதை காணக்கூடியதாக இருந்தது.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியிலிருந்து 768, 769, 764 இலக்க சேவைக்களான அளவெட்டி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை, கீரிமலை போன்ற பகுதிகளுக்கான பேருந்துகளுக்காகவே மக்கள் காத்துநின்றனர். நேரக்கணிப்பாளர்கள் இச் சேவைகளில் நேற்றுமுன்தினம் பாதிப்பு ஏற்பட்டதாக தெரிவித்துள்ளதுடன் இவ் விழா இடம்பெற்றமையால் இடநெருக்கடியும், ஊழியர்கள் சேவையில் ஈடுபடாது நிகழ்வில் கலந்து கொண்டமையால் இச்சேவைகள சில மணிநேரம் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமையான போதிலும் அவசிய தேவைக்காக நகருக்கு வந்த பொதுமக்கள் சிற்றூர்திச் சேவையையே நாடிச சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

எனினும் இவ்வாறான நிகழ்வுகளை மக்களின் போக்குவரத்துச் சேவையை பாதிக்கும் வகையில் நடாத்திவிட்டு மக்களுக்கு சேவை செய்யும் வகையில் அனைத்து போக்குவரத்துச் சபை ஊழியர்களும் உழைக்க வேண்டும் என உரையாற்றிய அரசியல்வாதிகள் ஏனோ இந்த மக்களின் தேவையை காணாது இருந்தார்களோ என அங்கு வந்து சென்ற பயணிகள் பலரும் விசனமடைந்துள்ளனர்.

சிறு குழந்தைகள், தனியார் வகுப்புக்கு சென்ற மாணவர்கள் முதியோர்கள் என பலர் இவ்வாறு பேருந்து சேவை கிடைக்காடையால் பேருந்துதரிப்பிடத்தில் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை வல்வை ஒன்றிய பொதுக்கூட்டமும் அங்கத்தவர் தெரிவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு -நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# மரக்கறிகளின் விலை
# வலி.தென்மேற்கில் அதிகம்

(யாழ்ப்பாணம்)

மரக்கறிகளின் விலை யாழ். குடாநாட்டில் சரிவடைந்த போதிலும் வலி.தென்மேற்கு, மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை பகுதிகளில் மிக உயர்வான விலைகளிலேயே விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

குறிப்பாக மருதனார் மடம், திருநெல்வேலி சந்தைகளில் ஒரு கிலோ கத்தரிக்காய் 40 - 60 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

வலி.தென்மேற்கு பகுதிகளில் அதே 1 கிலோ கத்தரிக்காய் 160 ரூபா முதல் 200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இதே போல் ஏனைய மரக்கறிகளும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளை விட அதிக விலைக்கு விற்கப்படுவது ஏன்? என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# பிரதி வெள்ளிக்கிழமைகளில்
# அபூபக்கர் பள்ளியில் ஜும்மா நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அராலி வீதியிலுள்ள மஸ்ஜிதுல் அபூபக்கர் பள்ளியில் கடந்த வெள்ளிக்கிழமை ஜும்மா பிரசஸ்கமும் தொழுகையும் இடம்பெற்றன. யாழில் மீள்குடியேறியவர்களில் கணிசமான குடும்பங்கள் இப்பகுதியில் காணப்படுவதினால் தொடராக பிரதி வெள்ளிக்கிழமைகளில் ஜும்மா நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளன.

வழமைபோல் ஏனைய நாலு ஜும்மாப் பள்ளியிலும் சுழற்சி முறையில் வாரம் ஒருமுறை ஒவ்வொரு பள்ளியிலும் ஜும்மா நடைபெறுமென யாழ்.உலமா சபைத் தலைவர் மௌலவி ஏ.எம்.ஏ. அஸீஸ் கூறியுள்ளார்.

அதேநேரம் பெரிய பள்ளி ஜும்மா, மஸ்ஜித் முஹம்மதியா பள்ளியிலிருந்து 50 மீற்றர் தொலைவிலுள்ள தக்வா சென்றரிலும் கடந்த வாரத்திலிருந்து ஜும்மா பிரசஸ்கமும் தொழுகையும் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கதாகும். (105)

# குப்பை கூழங்களால் நிறைந்திருக்கும் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் வீதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் வீதியின் இருபகுதியிலும் குப்பை கூழங்கள் பரவலாகக் காணப்படுவதுடன் சுகாதார சீர்கேடு நிறைந்த இடமாக வீதி ஓரம் காணப்படுவதால் மாணவர்கள், பொதுமக்கள் குறித்த வீதியால் பயணம் செய்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

குறித்த வீதி துப்புரவு செய்வதில் உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து செயற்பட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

## முரசின் இன்றைய பலன்

(17.03.2015 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் பங்குனி மாதம் 03 ஆம் திகதி.
துவாதசி திதி / சித்தம் யோகம்.
திருவோணம் நட்சத்திரம் மாலை. 05.21 வரை. பின் அவிட்டம்.
இராகு காலம 03.19 - 04.49 வரை. சுபநேரம 10.49 - 12.19 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — அடக்காத முன்கோபத்தினால் கவின் நிலை கெட்டுவிடல்.

**ரிஷபம்** — கொடுத்த கடனை மீளப்பெற முடியாது முறைப்பாடு மேற்கொள்ளல்.

**மிதுனம்** — நோய் குணமடைய சத்திர சிகிச்சை மேற்கொள்ளல்.

**கடகம்** — தனித்துச் சென்றதால் திருட்டுப் போகும் அபாயம் தக்க வைத்தல்.

**சிம்மம்** — ஞாபக இழப்பினால் பொருளைத் தவறவிட்டு துயரடைதல்.

**கன்னி** — பரீட்சைச் சித்தியினால் அரசுப் பணி கிடைக்கும் நம்பிக்கை மேலிடல்.

**துலாம்** — வாகனயோகங்கிட்ட மாமனின் கருணை ஏற்படல்.

**விருச்சிகம்** — குருகோசரம் 9 இல் நிற்பதினால் பயண முயற்சியில் காலபதித்தல்.

**தனுசு** — அட்டமத்து வியாழன் தொட்டது நாசமாகலாம் எனப்பீதியடைதல்.

**மகரம்** — பழைய மனையை இடித்து புதியது ஆரம்பிக்க எண்ணமிடல்.

**கும்பம்** — தொடர்ந்து நட்ட நிலை இருப்பதினால் தொழிலைமாற்ற முற்படல்.

**மீனம்** — தடைப்பட்டிருந்த சம்பள ஏற்றம் கிடைத்ததை எண்ணி மகிழ்வடைதல்.

# டோனியின் வியூகம்




இந்திய அணி கப்டன் டோனி விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பெடுத்து ஆடுதல் போன்றவற்றில் முத்திரை பதித்து வருகிறார்

டெஸ்ட், ஒருநாள், 20 மற்றும் ஐபிஎல் என்று தொடர்ச்சியாக போட்டிகளில் விளையாடி வந்தாலும், கொஞ்சம் கூட சோர்வு அடையாமல் அணியை வெற்றிகரமாக வழிநடாத்துவதுடன் விக்கெட் காப்பாளர் பணியிலும் உற்சாகமாக அசத்தி வருகிறார். வித்தியாசமான வியூகங்களுக்கு பெயர் பெற்ற அவர், கடந்த மூன்று ஆண்டுகளாக காப்பாளர்பயிற்சி செய்வதை தவிர்த்து வருகிறார் என்பது ஆச்சரியமான உண்மை. காப்பாளர் வலைப்பயிற்சி, சக வீரர்களுடன் இணைந்து களத்தடுப்பு பயிற்சி, கால்பந்து விளையாடுவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ள டோனி கீப்பிங் கிளவுஸ் மற்றும் கால்காப்பு அணிந்து பயிற்சி செய்வதே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. குறைந்த பயிற்சி, சிறப்பான கீப்பிங் என்பதே டோனியின் வெற்றியின் இரகசியமாக உள்ளது.


## கூடைப்பந்தாட்ட போட்டி முடிவு

யாழ். இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆண்கள் பெண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளன.

இதில் 19 வயது பிரிவு ஆணகளுக்கான அரையிறுதி போட்டியில் யாழ்.மத்திய கல்லூரியும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையும் மோதவுள்ளன.

இதேவேளை 19 வயது பிரிவு பெண்களுக்கான முதல் சுற்றில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடமும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதியதில் திருக்குடும்ப கனனியர் மடம் 59:12 என்ற செற கணக்கில் வெற்றிபெற்றது. (93)

# ஸ்ரீகாந்த் முதலிடம்



சுவிஸ் கிராண்ட் ப்ரீ கோல்ட் சம்பியன்ஷிப் பட்மிண்டன் தொடரின் இறுதி ஆட்டத்தில், இந்தியாவின் ஸ்ரீகாந்த் பட்டம் வென்றார்.

சுவிட்சர்லாந்தின் பசெல் நகரில் இப்போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில், தரவரிசையில் நான்காவது இடத்தில் உள்ள ஆந்திரத்தைச் சேர்ந்த ஸ்ரீகாந்த், தரவரிசையில் ஆறாவது இடத்தில் உள்ள டென்மார்க்கின் விக் டர் அலெக்சனை சந்தித்தார்.

முதல் செட்டை ஸ்ரீகாந்த் வசப்படுத்த, இரண்டாவது செட்டை அலெக்சன் தனதாக்கி னார்.

விறுவிறுப்புடன் நடந்த மூன்றாவது செட்டை ஸ்ரீகாந்த் கைப்பற்றினார். 47 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில், 21-15, 12-21, 21-14 என்ற செட் கணக்கில் ஸ்ரீகாந்த் வெற்றி பெற்றார்.

# சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட கரப்பந்தாட்ட போட்டி முடிவு

(அளவெட்டி)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டி அண்மையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு,

15 வயது பிரிவு பெண்கள் பண்டத்தரிப்பு மகா வித்தியாலயம், இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

17 வயது பிரிவு

பண்டத்தரிப்பு மகா வித்தியாலயம், இளவாலை கன்னியர் மடம் மகா வித்தி யாலயம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

19 வயது பிரிவு

இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு மகா வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. (93)

# மென்பந்தாட்டப் போட்டி முடிவு

(அளவெட்டி)

வலிகாம வலய பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்தாட்டப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் 19 வயது பிரிவு ஆண களுக்கான போட்டியில் முதலாமிடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரியும், இரண்டாமிடத்தை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியும், மூன்றாமி டத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

19 வயது பிரிவு பெண் களுக்கான போட்டியில் முத லாமிடத்தை சுழிபுரம் விக்ரோறி யாக் கல்லூரியும், இரண்டாமிடத்தை பண்டத்தரிப்பு மகாவித்தியாலயமும், மூன்றாமிடத்தை வட்டு இந்துக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (93)

# உலக ஹொக்கி போட்டி இந்தியப் பெண்கள் வெற்றி



உலக ஹொக்கி லீக் தொடரின் இரண்டாவது சுற்று இறுதியில் இந்திய பெண்கள் அணி வெற்றி பெற்றது. டில்லியில் பெண்களுக்கான உலக ஹொக்கி லீக் தொடரின் இரண்டாவது சுற்று நடந்தது. இறுதியில் இந்தியா, போலந்து அணிகள் மோதின.

இந்தியா சார்பில் வந்தனா (15 ஆவது நிமிடம்) முதல் கோல் அடித்தார். இதற்கு போலந்தின் ஓரியானா(17) பதிலடி கொடுத்தார். பின் ராணி (44) ஒரு கோல் அடிக்க, ஆட்டம சூடு பிடித்தது. இந்திய அணிக்காக 200 ஆவது சர்வதேச போட்டியில் பங்கேறற கப்டன் ரீட்டு ராணி (59), தன் பங்கிற்கு ஒரு கோல் அடித்து வெற்றியை உறுதி செய்தார். முடிவில், இந்திய அணி 31 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# சங்கானை கல்விக்கோட்ட வலைப்பந்தாட்ட போட்டி முடிவு

(அளவெட்டி)

கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி அண்மையில் சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

15 வயதுப் பிரிவு

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம்.

17 வயது பிரிவு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

19 வயது பிரிவு

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, வட்டு இந்துக் கல்லூரி. (93)

இந்த அளவு விளம்பரத்திற்கு

1000/= ரூபா மட்டுமே






உலகக் கோப்பை 2015 கிரிக்கெட் போட்டிகளில் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருக்கும் இலங்கையணிக்கு நேற்று முன்தினம் ஜனாதிபதி ஸ்கைப் ஊடாக தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். பல சாதனைகளைப் புரிந்து நாட்டுக்கு நற்பெயரை ஈட்டித்தந்துள்ள குமார் சங்கக்காரவுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துள்ள ஜனாதிபதி இலங்கையணி உலகக் கோப்பையை வென்று வர வேண்டும் என வாழ்த்தியதோடு பிரார்த்தனையும் புரிந்துள்ளார்.

# விளையாட்டு நிகழ்வுகள்





வ/பூவரசங்குளம் பூவரசு ஆரம்பப் பாடசாலை (160)




வ/குளவிசுட்டான் அ.த.க.பாடசாலை (160)




பூநகரி கிராஞ்சி அ.த.க.பாடசாலை




சுன்னாகம் கண்ணகை விளையாட்டுக் கழகத்தினரால் மயிலிட்டி ஒன்றியம் கனடா கிளை நிர்வாகத்தின் அனுசரணையில் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களின் நிகழ்வு அண்மையில் கண்ணகி விளையாட்டுக் கழக மைதானத்தில் சிறப்புற நடைபெற்ற போது (18)

## இணுவில் கல்விக் கோட்ட பெருவிளையாட்டு முடிவுகள்

விளையாட்டு செய்திகள்

**கரப்பந்தாட்டப் போட்டி (ஆண்கள்)**

15 வயது கீழ் பிரிவு- 1 ஆம் இடம் இணுவில் இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் இணுவில் மத்திய கல்லூரி, 3 ஆம் இடம்-தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

17 வயது கீழ் பிரிவு- 1ஆம் இடம்- இணுவில் இந்துக் கல்லூரி, 2 ஆம் இடம் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, 3 ஆம் இடம்- இணுவில் மத்திய கல்லூரி.

19 வயது கீழ் பிரிவு- முதலாமிடம் இணுவில் மத்திய கல்லூரி தெரிவாகியுள்ளது.

**பெண்கள்**

15 வயது கீழ் பிரிவு- 1ஆம் இடம் இராமநாதன் கல்லூரி, 2ஆம இடம் இணுவில் இந்துக் கல்லூரி, 3 ஆம இடம் -இணுவில் மத்திய கல்லூரி

17 ·வயது கீழ் பிரிவு- 1ஆம் இடம்- இணுவில் இந்துக் கல்லூரி 2 ஆம் இடம் இராமநாதன் கல்லூரி, 3 ஆம் இடம்- ஏழாலை சைவ மகாவித்தியாலயம்.

19 வயது கீழ் பிரிவு- 1ஆம் இடம்- இணுவில் இந்துக் கல்லூரி, 2 ஆம் இடம்- இணுவில் மத்திய கல்லூரி.

**மென்பந்துப் போட்டி முடிவுகள்**

1 ஆம் இடம்-இணுவில் மத்திய கல்லூரி, 2 ஆம் இடம்- ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, 3 ஆம் இடம் ஏழாலை முருகன் வித்தியாலயம்.

**வலைப்பந்துப் போட்டி முடிவுகள்**

15 வயது கீழ் பிரிவு 1 ஆம் இடம்- இராமநாதன் கல்லூரி, 2 ஆம் இடம் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை,

17 வயது கீழ் பிரிவு 1 ஆம் இடம்- இராமநாதன் கல்லூரி 2 ஆம் இடம்- ஏழாலை மகாவித்தியாலயம், 3 ஆம் இடம் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை,

19 வயதுப் பிரிவு- முதலாமிடம்-இராமநாதன் கல்லூரி (66)

கலை


# சர்மலா சந்திரதர்சன் ஓவியக் கண்காட்சி

— குமரன் —

சர்மலா சந்திரதாசனின் ஓவியக் கண்காட்சியொன்று திருமறைக் கலா மன்றத்தின் கலைத்தூது கலாமுற்றம் ஓவியக் கூடத்தில் கடந்த மாதம் 21ஆந் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஒரு மாதத்துக்கு நடைபெறுகிறது. இந்த ஓவியக் கண்காட்சியை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மூத்த ஓவியர் ஆசை இராசையா திறந்து வைத்தார்.


சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் சிறப்புரை வழங்கினார். நிகழ்வில் ஓவியர்கள், ஓவிய ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.











பாரம்பரிய மற்றும் நவீன ஓவியங்களால் சிறப்பான படைப்பாக்கங்களைத் தந்து இக்கண்காட்சி மூலம் குறிப்பிடத் தக்க தனித்துவமான பெண்ணோவியராகத் தன்னை நிலை நிறுத்தியுள்ளார்.

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சர்மலா சந்திரதாசன் சிறுவயது முதலே ஓவியக் கலையில் தீவிர ஈடுபாடும் விடாமுயற்சியும் உடையவராக விளங்கியிருக்கிறார். இடம்பெயர்ந்து பல இடங்களிலும் வாழ்ந்த சூழலில் தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாட-சாலையிலும், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையிலும் கல்வி கற்ற இவர் யாழ் பல்கலைக் கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார். அப்பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார்.

இவரது சிறப்பு என்னவெனில் ஓவியத்தின் பல்வேறு முயற்சிகளிலும் இவர் ஈடுபடுவதும் அதற்கான இயலுமையைக் கொண்டிருப்பதும்தான். பிரதிமை, தத்ரூப ஓவியம், வார்ப்புக் கலை, நவீன ஓவியம் எனப் பல தளங்களிலும் இவரது ஓவியங்கள் பரிணமித்துள்ளன.

குறிப்பாக புடைப்பு ஓவியங்களை, கலப்பு ஓவியங்களை இவர் படைத்தளித்துள்ளார். பெண்களின் துயரங்கள், யுத்த அவலங்கள், அழகியல் வாழ்வனுபவங்கள் இவரது ஓவியங்களின் பேசுபொருளாக அமைந்துள்ளன.

"நான் சந்திக்கும் சூழலில் கண்டுணர்ந்த விடயங்களும், சந்திக்கும் மனிதர்களின் துன்ப துயரங்களும் என்னைப் பாதிக்கின்றன. அந்தப் பாதிப்பு என்னை ஓவியம் படைக்கத் தூண்டுகின்றது. மக்களின் பாடுகள், ஓலங்கள், துன்பியல் அனுபவங்களே எனது பெரும்பாலான ஓவியங்களாகும்" என்று கூறும் சர்மலா பாரம்பரிய வார்ப்புக் கலையில் நவீனத்துவ நுட்பங்களையும் சிந்தனைகளையும் உட்புகுத்தும் அவாவுடன் செயற்படுகிறார்.

வளர்ந்து வரும் இளம் பெண் ஓவியரான இவர் குறிப்பிடத்தக்க பெண்ணோவியராக தமிழ்ச் சூழலில் நடைபயில்வார் என்பதில் சந்தேகமில்லை.

---

# கே.வி. மகாதேவன்



62

- பி.ஜி.எஸ்.மணியன் -

ஒரு எழுத்தாளனாக ஆனந்த விகடன் பத்திரிகையில் தனது வாழ்வைத் தொடங்கி ஒரு பத்திரிகையாளராக மாறிய "இதயம் பேசுகிறது" மணியன் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் நெருங்கிய நட்பு வட்டத்துக்குள் விழுந்த பிறகு அவரது தூண்டுதலால் "உதயம் புரொடக்சன்ஸ்" என்ற பட நிறுவனத்தைத் தொடங்கி எம்.ஜி.ஆரே கதாநாயகனாக நடிக்க "இதயவீணை", "சிரித்து வாழவேண்டும்" என்ற இரண்டு படங்களையும், கே.பாலச்சந்தரின் இயக்கத்தில் "சொல்லத்தான் நினைக்கிறேன்" என்ற வெற்றிப் படத்தையும் கொடுத்த பிறகு மணியன் தயாரித்த நான்காவது படம் தான் "பல்லாண்டு வாழ்க".

ஹிந்தியில் மகத்தான சாதனை படைத்த வி.சாந்தாராம் அவர்களின் மாபெரும் வெற்றிப் படைப்பாக 1957இல் வெளிவந்த படம் தான் "தோ ஆங்கேன் பாரா ஹாத்".

சாந்தாராமின் இந்த சாதனைப் படைப்பை தமிழில் எம்.ஜி.ஆரை வைத்து தயாரிக்கும் உரிமையை வாங்கிய மணியன் அதனை "பல்லாண்டு வாழ்க" என்ற வண்ணப் படமாக தயாரித்தார். படத்தை கே. சங்கர் இயக்கினார்.

எம்.ஜி.ஆர். - கே.வி. மகாதேவன் - கே. சங்கர் கூட்டணியின் இரண்டாவது படம்.

அப்போது கே.ஜே. ஜேசுதாஸ் பிரபலமடைந்த நேரம். படத்தில் எம்.ஜி.ஆருக்காக நான்கு பாடல்களை ஜேசுதாஸ் பாடினார். என்றாலும் தனக்காக டி.எம்.எஸ்.ஸும் பாடவேண்டும் என்று எம்.ஜி.ஆர். விரும்பியதன் பேரில் "புதியதோர் உலகம் செய்வோம்" என்ற பாரதிதாசன் பாடலை டி.எம்.எஸ். - வாணி ஜெயராம் இணைந்து பாடினார்கள். மற்ற பாடல்களை புலமைப்பித்தன், நா. காமராசன் ஆகிய இருவரும் எழுத, ஜேசுதாசுடன் பி.சுசீலா, வாணிஜெயராம், டி.கே. கலா ஆகியோர் இணைந்து பாடினார்கள்.

"இசையும் பாடல்களும் தரமாக அமைந்திருக்கின்றன" என்று இந்தப் படத்துக்கு விமர்சனம் எழுதியது ஆனந்த விகடன்.

"ஒன்றே குலமென்று பாடுவோம்" - படத்தின் தீம் சோங் இதுதான். கே.ஜே. யேசுதாஸின் வருடும் குரலில் பாடலை இனிமையாக அமைத்திருக்கிறார். பாடலின் மெட்டு "ஏ மாலிக் தேரே பந்த் ஹம" என்ற மூலப்பாடலின் மெட்டை நினைவு படுத்தினாலும் இணைப்பிசையிலும் தொடரும் சரணங்களிலும் வேறுபடுத்தி தனது முத்திரையைப் பதித்திருக்கிறார் கே.வி.மகாதேவன்.

"போய் வா நதி அலையே" - யேசுதாஸ் - டி.கே. கலா. இந்தப் பாடல் பாடகி டி.கே. கலாவுக்கு ஒரு மிகப் பெரிய வரவேற்பைக் கொடுத்தது. அதற்கு முன்பே அவர் பாடி இருந்தாலும் அவரை பிரபலமாக்கியது இந்தப் பாடல் தான்.

"என்ன சுகம் என்ன சுகம்" - யேசுதாஸ் - பி. சுசீலாவின் இணைவில் ஒரு இனிமையாக மனதை வருடும் பாடல்.

"இன்று சொர்க்கத்தின் திறப்பு விழா" - யேசுதாஸ் - வாணி ஜெயராம் இணையும் பாடல்.




"மாசி மாசக் கடைசியிலே" - வாணி ஜெயராம் குரலில் கதாநாயகியின் அறிமுகப் பாடல்.. என்று எல்லாவற்றையுமே ஹிட் பாடல்களாகக் கொடுத்தார் கே.வி.மகாதேவன்.

"சின்ன பாப்பா உன்னை ஒன்று கேட்பேன் சொல்லு பாப்பா" - வழக்கமாக எம்.ஜி.ஆர். படத்தில் தத்துவப் பாடல் என்றால் அவர் பாடுவதாக இருக்கும். இந்தப் பாடலோ கதாநாயகி பாடுவதாக அமைந்த பாடல். வாணி-ஜெயராமின் இனிய குரலை கச்சிதமாகப் பயன்படுத்திக்கொள்ளும் விதமாக பாடல்களை அமைத்திருந்தார் கே.வி.மகாதேவன்.

படம் நூறுநாட்கள் ஓடி வெற்றி பெற்றதென்னவோ உண்மைதான்.

ஆனால் விமர்சனங்கள் என்னவோ மிகக் கடுமையாக இருந்தன.

விகடன் ஒன்று தான் "எம்.ஜி.ஆர்.ரசிகர்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே பல்லாண்டு வாழ்க ஓர் இனிய சித்திரம்" என்று பாராட்டு மழை பொழிந்தது.

சாந்தாராம் கூட "நான் செய்த பெரியதப்பு என் படத்தோட ரீ-மேக் உரிமையை உங்களுக்கு கொடுத்ததுதான்" என்று மணியனிடம் தனது அதிருப்தியை வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

ஆகக்கூடி வி. சாந்தாராமின் படம் முழுக்க முழுக்க எம்.ஜி.ஆர். படமாகி அவரது ரசிகர்களின் எதிர்பார்ப்புகளுக்கு எல்லாம் சரியான தீனி போட்ட படமானது எனபதுதான் நிஜம்.

கே.வி.மகாதேவன் எம்.ஜி.ஆருக்காக இசை அமைத்த படங்கள் மொத்தம் 36. அவற்றில் பல்லாண்டு வாழ்க தான் அவர் இசையமைத்த கடைசி எம்.ஜி.ஆர். படம்.

தொடர்ந்து வருடத்துக்கு இரண்டு, ஒன்று என்ற அளவில் மகாதேவனின் எல்லை சுருங்க ஆரம்பித்தது.

சிவாஜி நாடக மன்றத்தின் சார்பில் எஸ்.ஏ. கண்ணன் எழுதி பலமுறை அரங்கேறிய நாடகம் "விதி". இந்த நாடகம் "சத்தியம்" என்ற பெயரில் படமாக 1976 இல் வெளிவந்தது. சிவாஜி கணேசன் - தேவிகா ஜோடியாக நடிக்க இரண்டாவது கதாநாயகனாக கமலஹாசன் நடித்தார். அவருக்கு இணையாக ஜெயசித்ரா - மஞ்சுளா ஆகிய இருவரும் நடித்தனர்.

கே.வி. மகாதேவன் இசையில் 1976-இல் வெளிவந்த இந்தப் படத்தில் "கல்யாணக் கோவிலின் தெய்வீகக் கலசம்" என்ற எஸ்.பி.பாலசுப்ரமணியம் - பி.சுசீலாவின் பாடல் இன்றளவும் கேட்கத் திகட்டாத பாடல்.

படம் சுமாராகப் போனது.

(தொடரும்)

# பளிக்கறைப் பிம்பங்கள்

- ஜெயமோகன் -

கண்ணகி மதுரையை எரித்தபின் மலைமேல் அமர்ந்த சேதி நாடெங்கும் பரவுகிறது. மாதவி கோவலனின் மகளாகிய மணிமேகலையுடன் தன் பொருட்களை எல்லாம் போதி மரத்தின் கீழ் அறவண அடிகள் முன்னர் தானம் செய்து துறவறம் ஏற்கிறாள்.

இந்நிலையில் மணிமேகலை ஒரு தாசிப்பெண் என்றும், அவளை அடையலாம் என்றும் மணிமேகலையின் பாட்டியும் மாதவியின் தாயுமான சித்ராபதி சோழ-னின் மகனான உதயகுமரன் மனதில் ஆசையை மூட்டுகிறாள். அந்நாளில் பூம்புகாரில் இந்திரவிழா நடைபெறுகிறது. அன்று நாடகப்பெண்டிரின் ஆடலும் பாடலும் நடக்கின்றன. மாதவியும் மணிமேகலையும் அவ்விழாவில் கலந்துகொள்ளவில்லை. இதனால் ஊர் மக்கள் பழித்துப் பேசுகின்றனர்.

சித்ராபதி மாதவியின் தோழியான வயந்தமாலையை அழைத்து மாதவியை அழைத்து வருமாறு கூறுகிறாள். மாதவியைக் காணச்சென்ற வயந்த மாலையிடம் மணிமேகலையை "காவலன் பேரூர் கனையெரி ஊட்டிய மாபெரும் பத்தினி மகள்" என்று குறிப்பிடுகிறாள் மாதவி. தன் மகள் என்றல்ல கண்ணகியின் மகள் என்றே அவளை அறிமுகம் செய்கிறாள்.

அந்த அடையாளம் சூட்டல் முக்கியமானது. இனி அவள் கணிகை அல்ல என்கிறாள். அவள் பத்தினியின் மகள். அதைவிட முக்கியமானது அவள் ஒரு மன்னனின் நகரை எரித்தவளின் வழிவந்தவள் என்ற குறிப்பு. அது உதயகுமரனுக்கு ஒரு எச்சரிக்கையும் கூட.

அப்போது அதைக்கேட்டுக்கொண்டே மாலை தொடுத்துக்கொண்டிருந்த மணிமேகலை கண்ணீர்விடுகிறாள். கண்ணீர் பட்டுப் பூமாலை நனைகிறது. மாலை அசுத்தமாகிவிட்டது. வேறு மலர்களைக் கொய்து கொண்டுவந்து புதிய மாலைகட்டு என்று மாதவி ஆணையிடுகிறாள். மணிமேகலை தன் தோழி சுதமதியுடன் மலர் கொய்வதற்காக உபவனம் செல்கிறாள்.

அவள் செல்வதை உதயகுமரன் கேள்விப்படுகிறான். "மதுமலர்த் தாரோன் மனமகிழ்வு எய்தி ஆங்கு அவள் தன்னை என் அணித்தேர் ஏற்றி ஈங்கு யான் வருவேன்" என்று வஞ்சினம் சொல்லிக் கிளம்பிச்செல்கிறான்.. அவனிடமிருந்து தப்பித்துக் கொள்ள எண்ணிய மணிமேகலை அங்கிருந்த பளிங்கினால் அமைக்கப்பட்ட பளிக்கறை மண்டபத்தில் புகுந்துவிடுகிறாள். உபவனத்துக்குள் வரும் உதயகுமரன் பளிங்குச்சுவர்கள் வழியாகத்தெரியும் அவளை பளிங்குச்சுவர்களில் வரையப்பட்ட ஓவியங்களாக நினைக்கிறான். சுற்றிச்சுற்றி வந்து ஓவியங்களைப் பார்த்து அவற்றின் அழகில் பிரமிக்கிறான்.

"ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன் காவி அம் கண்ணி ஆகுதல் தெளிந்து தாழ் ஒளி மண்டபம் தன் கையின் தடைஇ" மீண்டான் என்கிறார் சாத்தனார். மணிமேகலை தன்னை ஏமாற்றிவிட்டாள் என உணர்ந்ததும் மணிமேகலையை உதயகுமரன் வசைபாடுகிறான். கற்புதான் இலள், நல் தவ உணர்வு இலள், வருணக்காப்பு இலள், பொருள்விலையாட்டி" என்று இழிவு செய்கிறான்.

உதயகுமரன் சென்றபின் மணிமேகலை வெளியே வருகிறாள். அத்தனை இழிவு செய்தபின்னும் தன் மனம் உதயகுமரனை காதலிப்பதைச் சொல்கிறாள். புதுவோன் பின்றைப் போனது என் நெஞ்சம் இதுவோ அன்னாய் காமத்து இயற்கை?" என்று வியக்கிறாள்.

மணிமேகலையில் மிக நுட்பமான இடம் இது. இது நேரடியான ஒரு வாழ்க்கைச்சித்தரிப்பு அல்ல. ஆனால் வாழ்க்கையின் உண்மையைச் செறிவாக்கிப் படிமமாக முன்வைக்கும் இலக்கிய உத்தியின் மிகச்சிறந்த வடிவம் இது. ஆணுக்கும் பெண்ணுக்குமான உளப்போராட்டத்தின் சித்திரம் இதில் உள்ளது. இரு கூரிய வாட்கள் போல ஆணின் அகமும் பெண்ணின் அகமும் உரசிச்செல்லும் தருணம் இது.

ஆண் அகந்தையே வடிவாக இருக்கிறான். வெறும் காமத்தால் அவன் அவளை நாடி வருகிறான். உடைமைவெறியால் அவளைக் கொண்டுபோக முனைகிறான். அவளோ அவனுடைய அவமதிப்பால் சுருங்கிச் சிறுக்கிறாள். தன்னை மறைத்துக்கொள்கிறாள். மாயத்தோற்றம் அளித்து அவனை அலைக்கழிக்கிறாள். ஆனால் அந்த மாயத்தோற்றங்களுக்குள் அவள் அத்தனைக்குப் பிறகும் அவன் மேல் காதலுடன் இருக்கிறாள்.



அந்தப் பளிக்கறை தமிழிலக்கியத்தின் மிக முக்கியமான படிமங்களில் ஒன்று. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே என்றும் இருக்கும் பளிங்கு அறையல்லவா அது? பெண் தன்னை அதற்குள் ஒளித்துக்கொள்கிறாள். வெளியே அந்தப் பளிக்கறை அவளைப் பலநூறு பிம்பங்களாகக் காட்டுகிறது. அன்னையாக, தோழியாக, எஜமானியாக இன்னும் என்னென்னவோ ஆக. அந்த பிம்பங்களை தடவித் தடவிப் பரிதவிக்கி றான் ஆண். அதற்குள் இருக்கும் பெண்ணை அவனால் அறியவே முடியவில்லை.

அவள் தன்னை ஏமாற்றிவிடுவதாக நினைக்கிறான். அவளை வெறுக்கிறான் அவமதிக்கிறான். ஆனால் அந்தப் பளிங் கறைக்குள் செல்ல அதன் வாசல்களைத் திறக்க மிக எளிய ஒரு வழி உண்டு என அவன் அறிவதில்லை. அவளை அதற்குள் ஒளியச்செய்த தன் அகந் தையை முறிப்பதுதான் அது. அது அவனால் முடியாது. அவன் தோற்று விலகும்போது அவள் உள்ளுக்குள் இருந்து அவனுடைய காதலுக்காகக் கண்ணீர் வடிக்கிறாள். எவ்வளவு பெரிய நாடகம்!

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான இந்த மாயாவிளையாட்டைத் தமிழிலக்கியம் சொல்லிச் சொல்லிப் பார்த்திருக்கிறது. தமிழிலக்கியத்தில் மிக அதிகமாகப் பேசப்பட்ட கரு இதுதான். கு.ப.ராஜகோபாலன், தி.ஜானகிராமன் முதல் இன்று வரை. ஆண் பெண் உறவைத் தமிழிலக்கியம் இந்த அளவுக்குப் பேச என்ன காரணம்? நமக்கு ஆண் பெண் உறவு மிகச்சிக்கலானதாக இருக்கிறது என்பதனாலா? இருக்கலாம். ஆனால் அது உலகமெங்கும் அப்படித்தானே?

மணிமேகலை ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம். ஆயிரத்தைநூறாண்டுகளாக ஓடி வந்துகொண்டிருக்கிறது நதி. சாத்தனார் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே கண்ட அந்தப் பளிங்கறையின் மீது விரிந்த பிம்பங்களை நாம் இன்னும் எழுதிமுடிக்கவில்லை.


உண்மையில் அந்தப் பளிக்கறை தாண்டி

## எப்படிப் பேச வேண்டும்?



கோபமாகப் பேசினால் குணத்தை இழப்பாய்
அதிகமாகப் பேசினால் அமைதியை இழப்பாய்
வெட்டியாகப் பேசினால் வேலையை இழப்பாய்
வேகமாகப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்
ஆணவமாகப் பேசினால் அன்பை இழப்பாய்
பொய்யாகப் பேசினால் நற்பெயரை இழப்பாய்
சிந்தித்துப் பேசினால் சிறப்போடு இருப்பாய்.

## துணிகளைப் பராமரிக்க...



❖ பட்டுப் புடவைகளைத் துவைத்து அலசும்போது சிறிது எலுமிச்சைச் சாறு கலந்தால் அதிகம் சாயம் போகாது, மங்காது, பார்க்க பளிச்சிடும்.

❖ பட்டுப்புடவைகளை இரும்பு அலுமாரி யைவிட மர அலுமாரியில் வைத்தால் புதியது போல பல வருடங்கள் இருக்கும்.

❖ புதுத் துணிகளையோ, பட்டுப் புடவைகளையோ முதல்முறை நீரில் நனைக்கும்போது ஒரு கரண்டி உப்பு கலந்த நீரில் நனைத்தால் சாயம் போகாது.

❖ பட்டுப் புடவையில் படிந்த எண்ணெய்க் கறையைப் போக்க கொஞ்சம் ஷாம்பூ போட்டு அலசினால் போதும்.

❖ தண்ணீரில் சிறிது கிளிசரினைக் கலந்து துவைத்த பட்டுத் துணிகளை அலசி உலர்த்தினால் அதிகம் சுருங்காமல் இழைகள் விலகாமல் இருக்கும்.

❖ பட்டுப் புடவைகளைத் தண்ணீரில் நனைப்பதை விட 'ட்ரைவோ' செய்வதே நல்லது.

❖ நிறைய ஜரிகை உள்ள பட்டுப்புடவைகளை அடிக்கடி அதீத சூட்டில் அயர்ன் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் ஜரிகைகள் சூடு தாங்காமல் கறுத்துப் போகும் வாய்ப்பு உண்டு.

❖ உல்லன், கம்பளி போன்றவற்றை மடித்து அலுமாரியின் உள்ளே வைக்கப் போகிறீர்களா? ஒரு நிமிஷம்! நடுவில் வேப்பிலையை வைத்து, கட்டி வைத்தால் கம்பளியில் ஓட்டை விழாது.

❖ படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், பெரிய போர்வை போன்றவற்றை மிதமான சுடுநீரில் முக்கால் பாகம் வோஷிங் சோடாவும் கால் பாகம் சோப் பவுடரும் போட்டு ஊறவைத்துத் துவைத்தோமானால் துணிகள் பளிச்சென்றிருக்கும். சவர்க்கார செலவும் குறையும். துணிகளும் சாயம் போகாது.

❖ துவண்டு போயிருக்கும் பிரிண்டெட் பட்டுப் புடவைகளுக்கு புத்துயிர் ஊட்ட அரை வாளி குளிர்ந்த நீரில் ஒரு தேக்கரண்டி சாதாரண பிசினைச் சேர்த்துக் கலக்கவும். துவைத்த புடவையை இந்த நீரில் அமிழ்த்தி எடுத்து உலர்த்தவும்.

❖ புடவைக்கு கஞ்சி போடும்போது கொடியில் உலரப் போடுவதைவிட, தரையில் விரித்துக் காய வைப்பது சிறந்தது. ஏனெனில் அயர்ன் செய்யும்போது சுலபமாக இருக்கும்.

**பாவற்காய்:** முற்றாத பாவற்காயை மிக்ஸியில் போட்டு நன்றாக விழுது பதத்துக்கு அரைக்கவும். இந்த விழுதை ஓர் எலுமிச்சம்பழ அளவு எடுத்து வாயில் போட்டுக் கொண்டு சிறிதளவு வெந்நீரை அருந்தவும். இது போன்று உணவை சாப்பிட்ட அரைமணி நேரத்துக்கு பின், தொடர்ந்து 40 நாள் சாப்பிட்டு வர நீரிழிவு நோய் முழுமையாகக் குணமாகும்.

**முருங்கைக் கீரை:** முருங்கை இலைச்சாறை தினமும் 50 மில்லி கிராம் அளவுக்குச் சாப்பிட நீரிழிவு நோய்க்குச் சிறந்த மருந்தாகும்.

முருங்கைக் கீரையைப் பொரித்து நிலக்கடலையை தூள் செய்து சேர்த்துச் சாப்பிட மலச்சிக்கல் நீங்கும்.

முருங்கைத் துளிரும் கல்யாண முருங்கைத் துளிரும் சம அளவு அரைத்து சாறு எடுத்துக் கொடுக்க கல்லீரல், மண்ணீரல் நோய் நீங்கும்.

முருங்கை ஈர்க்கை இடித்து சிறிது சீரகம் சேர்த்து ரசம் வைத்துக் கொடுக்க கால் வீக்கம் குறையும்.

முருங்கைக் கீரையை அரைத்து எலுமிச்சை அளவு தினம் உண்டு வர பித்த மயக்கம், மூர்ச்சை நீங்கும்.

(மருத்துவ அறிவியல் மலர்)

## காய்களின் மகிமை





# பெண்மையை போற்றுவோம்!



திருமணமான அன்று அந்த இளம் த்ம்பதியினர் அவர்களுக்குள் ஒரு போட்டி வைத்துக் கொண்டனர்.அதாவது இன்று முழுவதும் யார் கதவை தட்டினாலும் நாம் திறக்க கூடாது என்பது தான் அந்த போட்டி.




போட்டி துவங்கிய சில மணி நேரத்திலே கணவரின் பெற்றோர்கள் கதவை தட்டினர். கணவர் கதவை திறக்கலாம் என்று நினைக்கும் போது. போட்டி ஞாபகத்துக்கு வரவே கதவை திறக்காமலே இருந்தார். அவரின் பெற்றோரும் சிறிது நேரம் கதவு அருகிலேயே நின்றிருந்தனர். கதவு திறக்காததால் சென்று விட்டனர்.

சில மணி நேரத்தில் அந்த பெண்ணின் பெற்றோர் கதவை தட்டினர். கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மனைவியால் தன் பெற்றோர் வெளியே நிற்பதை பார்க்க முடியாமல் கண் கலங்கி கொண்டே "என்னால் இனி மேலும் சும்மா இருக்க முடியாது" என்று கூறியவாறே கதவை திறந்து விட்டாள்.

கணவரும் ஒன்றும் சொல்லவில்லை. நாட்கள் உருண்டோடின. அவர்களுக்கு நான்கு மகன்களும் ஒரு மகளும் பிறந்தனர். அவள் கணவர் தனக்கு மகள் பிறந்ததை கொண்டாட பெரிய விருந்து ஏற்பாடு பண்ணினார். மகிழ்ச்சியுடன் விருந்து நடந்து முடிந்தது. அன்று இரவு அவர் மனைவி "நமக்கு மகன்கள் பிறந்த போது இந்த அளவு நீங்கள் கொண்டாட வில்லையே ஏன்? என்று கேட்டார். அதற்கு அந்த கணவர் சொன்னார்."என் மகள் தான் நாளை எனக்காக கதவை திறப்பாள்" பெண்கள் எப்போதுமே விலை மதிப்பில்லாதவர்கள். பாசத்துக்குரியவர்கள். பெண்மையை போற்றுவோம்!!!

# பொதுஅறிவு வினாக்கள்

1. ஆகாய விமானங்களின் வேகத்தை அளக்கும் கருவி எது?
2. "இன்சுலின்" கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
3. மனித உடலில் எத்தனை சதவிகிதம் நீர் உள்ளது?
4. உலகம் உருண்டை வடிவம் என்று முதலில் நிரூபித்த தத்துவஞானி யார்?
5. காபித்தூளில் கலக்கப்படும் சிக்கரித்தூள். சிக்கரி என்னும் தாவரத்தின் எப்பகுதியிலிருந்து தயாரிக்கப்படுகிறது?
6. பாம்புக்கு எத்தனை நுரையீரல்கள் உள்ளன?

"முயன்று பாருங்கள்" சிறார்களே இதற்கான விடைகள் அடுத்தவாரம் சிறுவர்முரசில் பிரசுரிக்கப்படும்.

# கலையின் சிகரம்

(அலெக்சாண்டர் டூமாஸ்)




உலகிலேயே அதிக நூல்களை எழுதிய எழுத்தாளர் என அழைக்கப்படுபவர் அலெக்சாண்டர் டூமாஸ். 68 ஆண்டுகள் வாழ்ந்த இவர், 1200 புத்தகங்களை எழுதியுள்ளார். எழுத்தின் மூலம் அதிகம் சம்பாதித்தவர் என்ற பெயரும் புகழும் இவருக்கு உண்டு.

டூமாஸின் தந்தை, நெப்போலியனின் குதிரைப் படையில் போர் வீரன் என்பதால் உலகின் பல பாகங்களுக்கும் செல்லும் வாய்ப்பைப் பெற்றார். ஒவ்வொரு இடத்திற்குச் சென்று வந்ததும், தன் மகன் டூமாஸை அழைத்து, தான் சென்று வந்த நாடுகள், அந்நாட்டின் சிறப்பம்சங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், அங்கு தோன்றிய எழுத்தாளர்கள், அவர்களின் நூல்கள், அந்த நூல்களின் மூலம் அந்த நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியெல்லாம் விரிவாகக் கூறுவார்.

பின்பு, பேனாவின் சக்தியையும், எழுத்தின் வலிமையையும் கதை போல சொல்வார். டூமாஸின் வெற்றிக்கு இந்நிகழ்வுகளே அடிப்படையாயின. -அன்டோனி (Antony), -மூன்று துப்பாக்கி வீரர்கள் (The Three Muske teers) போன்ற படைப்புகள் டூமாஸின் எழுத்தாற்றலுக்குச் சான்று பகர்பவை. புகழும் பணமும் போட்டி போட்டுக் கொண்டு வரவே, -டூமாஸ் பணம் கொடுத்து, தமது வீட்டில் சிலரை வைத்து எழுதி அதனைத் தமது பெயரில் வெளியிடுகிறார் என்று பொறாமையாளர்கள் பிரச்சாரம் செய்தனர்.

பொய்ப் பிரச்சாரங்கள் அனைத்தையும் வீழ்த்திய டூமாஸ், நாவல்களை நீல நிறத் தாள்களிலும், கவிதைகளை மஞ்சள் நிறத் தாள்களிலும், கட்டுரைகளை ரோஜா நிறத்தாள்களிலும் எழுதுவதை வழக்கமாகக் கொண்டவர். -கலையின் சிகரம் என பெர்னாட்ஷாவினால் அழைக்கப்பட்டவர்.

# வீட்டுக்கொரு ஹெலிகொப்டர்



இரு சக்கர வாகனமாக நாம் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிளில் ஹெலிகொப்டரின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உலகின் முதல் பறக்கும் மோட்டார்சைக்கிளான "ஹோவர்பைக்" உருவாக்கப்பட்டுள்ளது.



ஹெலிகொப்டருடன் ஒப்பிடும் போது மிகவும் விலை குறைந்த, மலிவான, வலிமையான, ஒப்பிட முடியாத பயன்படுத்துவதற்கு எளிதான வாகனம் ஆகும். பறப்பதற்கு முற்றிலும் புதிய வழிமுறையினைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது.

நடுவில் உள்ள வெற்றிடத்தில் மனிதன் அமர்ந்தோ அல்லது மனிதன் இல்லாமலோ பறந்து செல்லும் ஹோவர்பைக் முற்றிலும் பாதுகாப்பானது. ஒரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு இதில் பொருட்களை வைத்து அனுப்பலாம். சிறிய அளவில் வான்வழியே பயணிக்க மிகுந்த பயன்மிக்கது. சென்சார் மூலமாக இயங்கக் கூடியது.

# தற்காலிக இடத்தில் வியாபாரம் நெருக்கடியில் நுகர்வோர்

(சுன்னாகம்)

மருதனார்மடம் சந்தையின் வளாகத்தில் புதிய கடைத்தொகுதி அமைக்கும் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் வியாபார நடவடிக்கைகள் தற்காலிகமாக இடம்பெறுவதால் வியாபாரிகளும் நுகர்வோரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சந்தைபிரதான சந்தையாக காணப்படுவதுடன் பல இடங்களிலிருந்தும் மரக்கறி மற்றும் பல வியாபாரிகள் வியாபார நடவடிக்கை மேற்கொள்வதுடன் அதிகளவான நுகர்வோர் நாளாந்தம் இச்சந்தையில் மரக்கறிகளையும் பழவகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்கின்றனர்.

எனினும் தற்போது வியாபாரிகளினதும் நுகர்வோரினதும் நெருக்கடியை தவிர்க்கும் வகையில் புதிய கடைத்தெரு அமைக்கப்பட்டு வருவதால் வியாபார நடவடிக்கை தற்காலிக இடத்தில் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வியாபாரிகளும் நுகர்வோரும் துவிச்சக்கர வண்டிகள் மோட்டார் சைக்கிள் சந்தையின் உட்பகுதியில் நிறுத்தப்படுதாகவும் இதுவும் இடநெருக்கடியையேற்படுத்துவதாக தெரிவிக்கப் படுகிறது.

எனவே சந்தையில் நிலவும் நெருக்கடியை தீர்க்க உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகிறது.(66)

# காரைநகரில் 160 பயனாளிகள் இந்திய வீட்டுத்திட்டத்திற்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளரும், பிரதேச சபை எதிர்க்சித் தலைவருமான வீரமுத்துகண்ணன் இந்தியவீட்டுத்திட்டம பெற்றுக்கொண்டபயனாளிகளின் வீட்டுக்கு அடிக்கல் நாட்டிஆரம்பித்து வைத்தார்.

காரைநகர் பிரதேசத்திற்கு 2ஆம் மாதம் 2015 ஆம் ஆண்டு இந்திய வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. இதில் J/46 G.Sபிரிவுக்கு 69 பயனாளிகளுக்கும் J/44 G.S பிரிவில் 91 பயனாளிகளுக்கும் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் புள்ளிஅடிப்படையில் மருத்துவ சான்றிதழ்கள் சமர்ப்பித்தவர்களுக்கும். இவ் வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கஞ்சா விற்ற இருவர் செல்வபுரத்தில் கைது

(மாங்குளம்)

முறிகண்டி மற்றும் செல்வபுரம் பகுதிகளில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

வவுனியா பிரதி பொலிஸ் மாஅதிபர் தலைமையிலான போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரின் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முறிகண்டியில் இருவர் கைது செய்யப் பட்டதோடு, அவர்களிடமிருந்து ஒரு தொகை கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை செல்வபுரம் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் சிவில் பாதுகாப்பு திணைகளத்தில் பணியாற்றுவதாகவும் காவற்துறையினர் தெரிவிக்கின்றனர்.

# ஆரம்பப் பிரிவு மாணவர்களின் சுற்றாடல் செயற்றிட்ட மாதிரிச்சந்தை



(கிளிநொச்சி)

மாத்தளன் றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களால் இம்முறையும் வருடாந்த மாதிரிச்சந்தை கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. சுற்றாடல் பாடத்திட்ட அடிப்படையில் மாணவர்களின் பிரயோக திறன்கள் விருத்தி செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்டுவரும் இச்செயன்முறை தரம் 5 மாணவர்களால் குறித்த தினத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பாடசாலை அதிபர் கெங்காதரன் மற்றும் ஆசிரியர்கள் ஜெயசுதன் மற்றும் பத்மசிறி ஆசிரியர்களின் ஊக்குவிப்பில் வருடந்தோறும் நடைபெற்று வரும் இம்மாதிரிச்சந்தையை ஊக்குவிக்கும் விதத்தில் வீதியைக் கடந்து சென்ற மக்கள் பலரும தரித்து நின்று அம்மாணவர்களுடன் கதைத்து சில பொருட்களை வாங்கிச்சென்றனர்.

மாத்தளன் பகுதிக்கு மக்கள் குறை கேள் சந்திப்பு ஒன்றுக்காக சென்றிருந்த வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறித்த மாதிரிச்சந்தையை பார்வையிட்டு அம்மாணவர்களுடன் கலந்துரையாடி பொருட்களை வாங்கியிருந்தார்.

பிள்ளைகளுக்கு புத்தகப்படிப்பு என்பதைத் தாண்டி அவற்றை பிரயோகிக்கும் விதத்தில் பல்வேறு நிகழ்வுகளை உருவாக்கி அவர்களை அவற்றில் பயிற்றுவித்து மாணவர்களின் திறன்களை வெளிக்கொண்டுவருவது அவசியம்.

வருடாந்தம் கூடும் இந்த மாதிரிச்சந்தையும் அந்த நோக்கத்தில் செயற்படுத்தப்படும் ஒரு நிகழ்வே பேரம்பேசல், விற்பனை உத்தி, வியாபார பிரயோகம் உள்ளிட்ட பல்வேறு ஆற்றல்களை மாணவர்களிடத்தில் இம்மாதிரியான நிகழ்வுகள் பரிச்சயமாக்கும்.

மேலும், மாணவர்களுக்கு வேறு வேறு வடிவத்தில் கல்வியை கொண்டுசேர்க்கும் போது அது அவர்களின் கல்வி மேம்பாட்டை மென்மேலும் உறுதிசெய்யும் என மாதிரிச் சந்தையை நெறிப்படுத்திய ஆசிரியர் தெரிவித்தார். (160)

# பதிவிருக்கப் பெட்டகம்

நம்முடைய அரசியல பற்றி ஆய்வாளர்களுடைய ஆரூடங்களைப் பார்க்கும் போது மகிந்த ராஜபக்ஷவின் சோதிடர் பரவாயில்லை என்றே தோன்றுகிறது. என்னென்னவெல்லாம் நடக்கும் என்று இறுதிப்போர் உக்கிரமாகிய காலத்தில் நமக்குச் சொல்லப்பட்டது. விடுதலைப்புலிகளால் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்ய இயலும் என்று சொல்லாத குறையாக அவர்களுடைய ஆற்றல்கள் விதந்துரைக்கப்பட்டன. அவர்கள் அடுத்தடுத்துத் தோல்விகளை எதிர்நோக்கிய தருணங்களிலெல்லாம் ஒவ்வொரு தோல்வியும் ஒரு மூலோபாயப் பின்வாங்கல் என்றும் தந்திரோபாயமான நகர்வு என்றும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டப்பட்டது. எந்தவிதமாக 1976இல் தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது, தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் ஒரு இரகசியத் திட்டம் இருப்பதாகச் சொல்லப்பட்டதோ அவ்வாறே விடுதலைப்புலிகளிடம் மகா மர்மமான திட்டங்கள் இருப்பதாக ஏறத்தாழ இறுதிநாள் வரை சொல்லப்பட்டது.

எல்லாவற்றையும் விட எரிச்சலூட்டுவது என்னவென்றால், தமிழ் மக்களிடம் பொய் நம்பிக்கைகளை விதைத்து அவர்களை நட்டாற்றில் விட்டோர் விடுதலைப்புலிகள் மட்டுமல்ல. ஒவ்வொரு தமிழ்த்தேசியத் தலைவரும் அதையே செய்திருக்கிறார். அவர்களுடைய பொய்களை நம்பித் தமிழ் இளைஞர்கள் எத்தனை பேர் சகோதரப் படுகொலைகளில் ஈடுபட்டுள்ளனர். எத்தனை பேர் மக்களுக்கு எதிரான குற்றங்களைச் செய்துள்ளனர். இந்தப் பொய்களையெல்லாம். தட்டிக் கேட்டவர்களுக்குத் தமிழ்த் துரோகிப் பட்டம் கட்டி, எல்லாக் கேள்விகளையும் தவிர்க்க முடிந்துள்ளது.

மாற்றுக் கருத்துக்களை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் என்றுமே தமிழ்த்தேசியவாத அரசியலில் இருந்ததில்லை. ஏனெனில் தமிழ்த்தேசியவாதிகள் முழுக்க முழுக்க உணர்ச்சி அரசியலைச் சார்ந்தே இருந்தனர். தமிழனுக்கு இனவெறி இயலுமென்றால், சிங்களவனுக்கும் முஸ்லிமுக்கும் மலையகத் தமிழனுக்கும் அது ஏன் இருக்கக்கூடாது?

மனிதருக்கு வேண்டியன, நியாய உணர்வும், சரி–பிழைகளை வேறுபடுத்தும் ஆற்றலும், பிறருடைய உணர்வுகளை விளங்கி அதற்கமைய நடக்கும் நிதானமுமே. தாங்கள் கேட்க விரும்பாத கசப்பான உண்மைகள் பிறர் காதுகளிலும் விழாமல் மறிக்க நம்மிடையே நிகழும் சூதுகளும் வஞ்சகங்களும் எவ்வளவு! நமது ஊடகங்களில் அன்றாடம் நாம் காணும், கேட்கும், செய்தித் திரிபுகட்கும் பின்னால் எவ்வகையான அரசியற் சிந்தனையுள்ளது?

இவற்றையெல்லாம் எதிர்கொள்ளாமல் மக்களிடம் உண்மைகளைக் கொண்டு செல்வது எளிதல்ல. ஆனால் ஒவ்வொரு பொய்யையும் திரிப்பையும் சந்திக்கும் போது பொய்யைப் பொய் யென்றும் திரிப்பைத் திரிப்பென்றும் உரத்துச் சொல்லும் தைரியம் நம்மில் நூற்றிலொருவருக்காது வருமென்றால் வெகு விரைவிலேயே ஏமாற்றுக்காரர்களை வெல்லலாம்.

– கோகர்ணன்

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மத்தியில் கடுமையான உள்மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. அண்மையில் லண்டனில் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரது உருவப் பொம்மைகள் எரிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் சுமந்திரனின் உருவப் பொம்மை எரிக்கப்பட்டது. சில இடங்களில் கட்டித் தொங்கவிடப்பட்டன. இவற்றின் மூலம் சம்பந்தனையும் சுமந்திரனையும் துரோகிகளாகக் காட்டும் முயற்சிகள் அரங்கேறி வருகின்றன.

இவை எவையும் தமிழ்த்தேசிய நாடாளுமன்ற அரசியல் களத்தில் புதிய நிகழ்வல்ல. காலத்திற்குக் காலம் இடம்பெற்று வந்தவை மட்டுமன்றி அவ்வக் காலங்களில் சுட்டுக்கொல்லப் பட்டவர்களின் 'துரோக'ப் பட்டியல் மிக நீளமானது. அவை யாவும் நாடாளுமன்ற ஆசனங்களை மையமாக வைத்தே இடம்பெற்று வந்தன.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மத்தியில் எழுந்துள்ள போட்டியானது தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன ஒடுக்குமுறையினை எவ்வாறு எதிர்த்து நிற்பது, அதற்குரிய ஒரு வெகுஜனக் கொள்கையை எவ்வாறு முன்னெடுப்பது பற்றியதல்ல. முற்றிலும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை மையமாக வைத்த குத்து வெட்டுகள், குழி பறிப்புகள், கழுத்தறுப்புகளாகவே இடம்பெற்று வருகின்றன.

ஆளை ஆள் குழிபறிப்பதன் மூலமே நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் நிற்கமுடியும். தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றம் செல்வது அதன் வரப்பிரசாதங்கள் அனைத்தையும் அனுபவிப்பதற்காகவே ஆகும். வெறும் எதிர்ப்பு அரசியல் செய்வதாகக் கூறிவந்த போதிலும் எந்தவொரு தமிழ்ப் பிரதிநிதியும் பேரினவாத இனவெறி ஆட்சியினரது சலுகைகள் எதனையும் கை நீட்டி வாங்காது விட்டது கிடையாது. மீண்டும் நாடாளுமன்ற ஆசனங்களுக்கும் அதன் மூலம் தாமே தமிழ் மக்களின் தலைமை சக்தி என்பதன் ஊடே இனவாதத்தையும் சுமந்துகொண்டு அரசியல் செய்யத் தமக்குள் அடிபிடிப்பட்டு நிற்கின்றனர்.

– காலகண்டன்

# இரவு நேர பேருந்து சேவைகள் அதிகரிப்பதற்கு நடவடிக்கை



(கொழும்பு)

இரவுநேர பேருந்து சேவைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக உள்ளக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது

பிரதான நகரங்களில் இருந்து கிராமங்களுக்கான இரவுநேர பேருந்து சேவைகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார தெரிவித்தள்ளார்.

ஏற்கனவே கொழும்பில் இருந்து அருகிலுள்ள நக்ரங்களுக்கான இரவுநேர பேருந்துச் சேவை கள் முன்னெடுக்கப்படுகின்றது

தூர பிரதேசங்களுக்கான இரவுநேர பேருந்து சேவைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், குறுகிய தூரங்களுக்கான பேருந்து சேவைகள் இடம்பெறாததால் மக்கள் அசௌகரியத்தை எதிர்நோக்குகின்றனர்.

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் பிரதான நகரங்களான காலி, கண்டி, குருநாகல் உள்ளிட்ட பல நகரங்களில் இருந்து கிராமங்களுக்கு பயணிக்கக்கூடிய, இரவு நேர பேருந்துச் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

இந்த பேருந்து சேவை இரவு 10 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்க வுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளனர்.

# மத்திய வங்கி ஆளுநரின் நியமனம் இலங்கையின் நற்பெயருக்கு களங்கம்

## எதிர்க்கட்சித் தலைவர் சீற்றம்

(கொழும்பு)

சிங்கப்பூர் குடியுரிமைபெற்ற ஒருவருக்கு மத்திய வங்கி ஆளுநர் பதவி வழங்கியமை ஒழுங்கு முறையற்றதாகும். இவருடைய நியமனம் இலங்கையின் நற்பெயருக்கு ஏற்பட்ட களங்கமாகுமென எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தினால் நிதி மோசடிகள் இடம்பெற்றதாக கூறி தேர்தல் பிரசாரம் செய்த ஐக்கிய தேசியக் கட்சியினர் இன்று அதே செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட முறியினால் அரசாங்கத்துக்கு 9 பில்லியன் நஷடம் ஏற்படும் வகையில் மோசடி இடம்பெற்றுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிதித்துறையில் மக்கள் அபிமானம் பெற்ற மத்திய வங்கி ஆளுநர் பதவிக்கு சிங்கப்பூர் பிரஜையான அர்ஜுன் மகேந்திரனை ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதமரும் ஐக்கிய தேசியக்கட்சியினருமே நியமித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியினருடன் கொண்டிருந்த தனிப்பட்ட அரசியல் தொடர்பு காரணமாகவே அவரை இந்தப் பதவியில் அமர்த்தினர். மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப் பட்டுள்ள அர்ஜுன் மகேந்திரன் தனது மருமகனுக்கு இலாபம் ஏற்படும் வகை யில் திறைசேரி முறியை வழங்கினார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த செயற்பாட்டினால் வட்டி வீதம் 9.5 வீதத்தில் இருந்து 12.5 வீதமாக உயர்வடைய உள்ளது.

இந்த முறியினால் பெற்றுக்கொள்ளக் கூடிய 10 பில்லியன் நிதியினால் 9 பில்லியன் ரூபா பணத்தை மக்களிடம் இருந்து அறவிட வேண்டியேற்படும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அர்ஜுன் மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநராக நியமிக்க முன்னர அவரது தனிப்பட்ட மற்றும் குடும்ப விபரங்களை ஆராய்ந்த பின்னரே அந்தப் பதவியில் அமர்த்தியிருக்க வேண்டும். எனினும் அவருடைய எந்த விபரங்களையும் ஆராய்ந்து பார்க்காமல் பதவியில் அமர்த்தியுள்ளமை இதன் மூலம் தெரியவந்துள்ளது.



அமெரிக்காவின் நிதி மோசடிகளில் தொடர்புடையவராக கருதப்பட்ட ராஜரத்னம் என்பவருடன் மிகவும் நெருக்கமான தொடர்பை வைத்துள்ள அர்ஜுன மகேந்திரன் சிறுபராயம் முதல் ராஜரத்னத்தின் நண்பராகவும் இருந்துள்ளார்.

புலிகள் அமைப்புடன் தொடர்புகளை பேணிவந்த ராஜரத்தினத்தின் நண்பரான அர்ஜுன் மகேந்திரன் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படுவது எவ்வாறு என்று இந்நாட்டு மக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரிடம் வினா எழுப்புகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

# கீழிறங்கியது நிலம் ஆய்வுகள் ஆரம்பம்

பண்டாரவளை கலஹிட்டியாவ பகுதியில் நிலம் தாழிறங்கியமை தொடர்பில் ஆய்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது

தேசிய கட்டட ஆய்வு நிலைய அதிகாரிகள் குறித்த பகுதியில் இந்த ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர கூறியுள்ளார்.

பண்டாரவளை கலஹிட்டியாவ பகுதியில் 25 அடி விட்டத்தைக் கொண்ட நிலப் பகுதி நேற்று முன்தினம் பிற்பகல மூன்று மணியளவில் தாழிறங்கியது.

இதனையடுத்து தாழிறங்கிய நிலத்தை அண்மித்த பகுதிகளில் வசித்துவந்த 12 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய அவர்கள் உறவினர்களது வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித் துள்ளார்

# சகல குற்றச்சாட்டுகளுக்கும் உரிய பதில் வழங்கப்படும்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



(கொழும்பு)

தமக்கு எதிரான சகல குற்றச்சாட்டுக்களுக்கும் உரிய பதிலளிக்கப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திறைசேரிப் பிணைப்பத்திரம் தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுனருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நாடு திரும்பியதன் பின்னர் அனைத்து குற்றச்சாட்டுக்களுக்கும் பதிலளிக்க உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அர்ஜுன் மகேந்திரன் பதவி விலக வேண்டுமென எதிர்க்கட்சிகள் மட்டுமன்றி ஆளும் கட்சியின் ஒரு தரப்பினரும் அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய வங்கியின் ஆளுநராக பொறுப்பேற்றுக்கொண்டதன பின்னர் வங்கிக்குள் மேற்கொண்ட பாரியளவிலான நிர்வாக மற்றும் கட்டமைப்பு மாற்றங்களினால் இந்த திறைசேரிப் பிணைப்பத்திர பிரச்சினைக்கு கூடுதல் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளது.

# உயிர் நீத்த வீரர்களுக்காக முன்னாள் ஜனாதிபதி வழிபாடு



(கொழும்பு)

கண்டி மேல் நாட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர்நீத்த வீரர்களுக்கு புண்ணியம் வேண்டி கதிர்காமம் கிரிவேஹர விகாரையில் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றன.

இதனையடுத்து போதி மரத்திற்கு அருகில் போதி பூஜை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாளவ மேதானந்த தேரர், முன்னாள் அமைச்சர்கள், விமல் வீரவன்ஸ, காமினி லொக்குகே, பந்துல குணவர்தன, தினேஃ குணவர்தன, குமார வெல்கம, உதய கம்மன்பில, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ச, நாமல் ராஜபக்ஷ, ஊவா முன்னாள் முதலமைச்சர் 'சீந்திர ராஜபக்ஷ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் மலை நாடான கண்டி ராஜ்ஜியத்தை ஆட்சி செய்த இறுதி மன்னனான விக்ரமராஜசிங்கன் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்ட பின்னர், கண்டி பிரதானிகளுடன் ஆங்கிலேய அரசு உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டது.

இந்த உடன்படிக்கை மூலம் முழு இலங்கையும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தமை குறிப்பிடத்தக்கது.

# உறவினர்களின் முறுகல் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது

(கொழும்பு)

களுத்துறையில் உறவினர்கள் இருவருக்கு இடையே ஏற்பட்ட தகராறின்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 42 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

எனினும் சந்தேகநபர் துப்பாக்கியுடன் தப்பிச் சென்றுள்ளார். மேலதிக விசாரணைகளை தெம்புவன பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.




# பல்கலைக்கழகங்களின் இரு உபவேந்தர்கள் சிக்கலில்

## விரிவுரையாளர் சம்மேளனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மற்றும் தென் கிழக்கு பல்கலைக்கழங்களின் உபவேந்தர்கள் தொடர்பிலும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் உபவேந்தரை நீக்குமாறு விஞ்ஞான பீட விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி பிரபாத் ஜயசிங்க கூறியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்திற்கான உபவேந்தர் முறையாக நியமிக்கப்பட வேண்டும் எனவும் விரிவுரையாளர்கள் வலியுறுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்

கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தரின் பதவிக் காலம் முடிவுக்கு வந்துள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக மூன்று மாதங்களுக்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சம்மேளனத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்


அத்தோடு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு எதிராக அந்தப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் சிலர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் கோரிக்கைகள் குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வாவிடம் வினவியபோது, யாழ்.பல்கலைக்கழகம் தொடர்பில் இதுவரை தமக்கு எவ்வித முறைப்பாடும் கிடைக்கவில்லை என கூறினார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளதால் அந்த முறைப்பாட்டிற்கு அமைய நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


49. நான்முகி ஒன்றின் முகம், விளிம்பு, உச்சி ஆகியவற்றின் எண்ணிக்கைகள் முறையே
(01).5,6,7 (02).8,10,12 (03).4.6,4 (04).5,9,12


50. ஈசான மூலைக்கு எதிரிலுள்ள திசை எது?
(01).தென்கிழக்கு (02).தென்மேற்கு (03).வடமேற்கு (04).வடகிழக்கு

51.


இவ் உபகரணத்தின் பெயர் யாது?
(01).காற்று வேகமானி
(02).காற்றுத் திசைகாட்டி
(03).மழைமானி
(04).அமுக்கமானி

(13).பின்வரும் தையல்களின் பெயரை எழுதுக

52.  ..........................................

53.  ..........................................

54. ஊர் ஒன்றில் அதிகமாக இருக்கவேண்டியது எது?
(01).வீதிகள் (02).ஆறுகள் (03).வீடுகள் (04).மாணவர்கள்

55. ரமணன் காலை 7மணிக்கு வீதியால் நடந்து சென்றபோது அவனது நிழல் அவனின் இடப்புறமாகத் தெரிந்தது. ஆகவே, ரமணன் சென்ற திசைக்கு எதிர்த்திசை எது?
(01).வடக்கு (02).கிழக்கு (03).தெற்கு (04).மேற்கு

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01).1.சரி 2.சரி 3.பிழை 4.சரி 5.பிழை (02).6.அமைதியாக இருந்து உண்ணுதல், வாயின் வெளிப்புறத்தே உணவுபடாது இருத்தல், உணவுப்பாத்திரத்தில் இருந்து உணவு சிந்தாது உண்ணுதல். 7.துர்நாற்றம் வீசும், நிறமாற்றம் ஏற்படும், ஒட்டும் தன்மையுடையதாயிருக்கும் 8.வயிற்றோட்டம், வாந்திபேதி, சமிபாட்டுக்கோளாறு ஏற்படும் 9.புதம், கொழுப்பு, காபோவைதரேற்று, மாப்பொருள் 10.குளிரேற்றுதல், உலர்த்துதல், உப்பிடுதல் (03).11.ஒட்டும் 12.நுண்ணங்கிகள் 13.கலப்பு 14.உப்பு 15.கண்கள் (04).16.1 17.2 18.4 19.2 20.1 21. 22.1 23.1 24.3 25.1 (05).26.இலங்கை 27.தேசியக்கொடி 28.வெசாக்கூடு 29.நத்தார்பண்டிகை 30.வேடுவர் 31.குத்துவிளக்கு 32.தைப்பொங்கல் 33.பள்ளிவாசல் (06).34.பிழை 35.சரி 36.சரி 37.சரி 38.சரி (07).39.சித்திரைமாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் 40.மார்கழி மாதம் 25ஆம் திகதி 41.சித்திரை 20ஆம் திகதி 42.தைமாதம் 14ஆம் திகதி 43.மேமாதம் 01ஆம் திகதி (08).44.சிங்களவர் - சிங்களம், தமிழர் - தமிழ், இஸ்லாமியர் - அநேகமானோர் தமிழ் சிலர் சிங்களம், பறங்கியர் - ஆங்கிலம் சிலர் தமிழ் பேசுவார் 45.மேதினவிழா, சிறுவர்தினவிழா, பரிசளிப்புவிழா 46.சுதந்திர தினவிழா, அரசதலைவர் இறந்தநாள், மேதினவிழா 47.சிறீ லங்கா தாயே - நம் சிறிலங்கா நமோ நமோ நமோ நமோ தாயே 48.தைப்பொங்கல், தீபாவளி (09).49.நாகமரம் 50.காட்டுக்கோழி 51.சிங்கம் 52.ஆனந்தசமரக்கோன் 53.நீலஅல்லி (10).54.4 55.4 56.1 57.2 58.1 59.1 60.2 61.1 62.3 63.1 (11).64.மின்சாரம் தாக்குதல் 65.தீப்பிடித்தல் 66.மரத்திலிருந்து விழுதல் 67.கழுதைகள்ளுதல் 68.நிலத்தில் உருளுதல் 69.கல்லில் தடக்கிவிழுதல் 70.மாடு முட்டுதல் 71.புனை விராண்டுதல் (12).72.பிழை 73.சரி 74.சரி 75.பிழை 76.சரி (13).77.யானைக்கால் நோய் 78.விசர்நாய் நோய் 79.பிளேக்நோய் 80.வயிற்றோட்டம் 81.சொறி, சிரங்கு

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 30 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

(01).01,02 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்படும் விடயத்தை எழுதுக

01. மாணவர்களால் என்னை இலகுவாகச் செய்ய முடியும். பொருளின் விம்பத்தை நான் காட்டுவேன். நான் காட்டும் விம்பம் தலைகீழானதாகவும் உருச்சிறுத்ததாகவும் இருக்கும்
..........................................

02. நான் பல்வேறு நிறங்களைக் கொண்டுள்ளேன். ஆனால் என்னில் கறுப்பு நிறம் இல்லை. நான் அழகாக இருப்பேன். சிறுவர்கள் என்னைப் பார்த்து இரசித்து மகிழ்வார்கள். என்னில் வில்லுண்டு.
..........................................

(02).பின்வரும் இரு கவிதைகளையும் கொண்டு 03,04 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக

மின்னி மின்னி ஒளிரும் அது
மின்மினிப் பூச்சி அல்ல
மஞ்சள் நிறத்தில் இருக்கும் அது
மங்கையர் சூடும் பூவும் அல்ல

சின்னச் சின்ன வண்டு
சிறகு அடிக்கும் வண்டு
கமகம மலரில் தேனை
களிப்புடன் அருந்தும் வண்டு

03.1. முதலாவது பாடல் எதைப்பற்றிக் கூறுகின்றது? ..........................................

2. இரண்டாவது பாடலில் களிப்புடன் என்பதன் கருத்து யாது? ..........................................

04.1. இரண்டாவது பாடலில் இரட்டைக்கிளவி எது? ..........................................

2. புஷ்பம் என்பதன் ஒத்தசொற்கள் இரண்டும் தருக? ..........................................

(03).பின்வரும் பந்தியிலுள்ள வெற்றிடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து வெற்றிடங்களை நிரப்புக.

05. வேட்டைக்குச் சென்ற அவன் தனித்து விடப்பட்டான்.......................................... (நல்லிரவு, நள்ளிரவு, நல்ரிரவு) வேளை புலியின் உறுமலும் சிங்கத்தின் (கர்ச்சனையும், உறுமலும், சீறலும்) காட்டை அதிரவைத்தன.

(04).கீழ்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

உலகம் வீடாமுயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள் இன்று நம் வீடுகளில் மின்விளக்குகள் எரிகின்றன. ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் இந்த மின்விளக்குகள் நம்மிடையே இல்லை. தோமஸ் அல்வா எடிசன் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மின்விளக்கைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்தார். தமது முதல் முயற்சியிலே தோல்வி கண்டார். சளைக்காது தனது ஆய்வைத் தொடர்ந்தார். பலமுறை தோல்வியைக் கண்ட அவர் இறுதியிலே தம் ஆராய்ச்சியில் வெற்றி கண்டார். மின்விளக்கு எரியத் தொடங்கியது. "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கு இணங்க வெற்றி பெற்றார். அல்லும் பகலும் முயற்சி செய்தமையாலேயே இவர் வெற்றி பெற்றார். இன்று இல்லங்களிலே மின்விளக்குகள் எரிய முன்னோடியாகத் திகழ்ந்த அறிவியல் மேதை தோமஸ்அல்வா எடிசன் ஆவார்.

06. யாருடைய சாதனை பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது? ..........................................

07. வெற்றிக்கு ஏணிப்படிகள் எவை? ..........................................

08. மின்விளக்கு கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி எப்போது தொடங்கப்பட்டது? ..........................................

09. பலமுறைகள் தோல்வியைக் கண்டாலும் இறுதியில் வெற்றிகான உதவியது எது? ..........................................

10. இங்கு இடம்பெற்ற மேற்கோளாக அமையும் கூற்று யாது? ..........................................

11. இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழிச் சொல் எது? ..........................................

(05).ஒத்தசொல் தருக

12. இரவு:- .......................................... 13. வீடு:- ..........................................

(06). எதிர்ச்சொல் தருக
14. வெற்றி:- .................................. 15. ஊக்கம்:- ..................................

16. "முயற்சி திருவினையாக்கும்" இதன் கருத்து யாது? ..................................

17. இங்கு இடம்பெற்றுள்ள உயர்திணை, ஆண்பால், பெயர்ச்சொல் ஒன்று எழுதுக? ..................................

(07). பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக.

18. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் ..................................

19. தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும் ..................................

(08). பொருத்தமான இடத்தில் நிறுத்தற்குறிகளை இடுக.

20. ஆந்தைக்கு இரவில் கண் தெரியுமா என்று கேட்டார்

21. உங்களில் சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறவர்கள் எழுந்து நில்லுங்கள் என்றார்


(09). அடைப்பினுள் இருக்கும் சொற்களை மாத்திரம் பயன்படுத்தி சரியான கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்கள் இடம்பெற வேண்டும். ஒரு சொல்லை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்துக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தம்பி | வானில் | பாடங்களைப் | மரம் | சூரியன் | உதித்தது |
| தொடங்கினான் | மெல்ல | மாலைக் | கிழக்கு | படிக்கத் | இருந்தது |
| மிகவும் | காட்சி | அழகாக | அழகிய | | |

22. ..................................

23. ..................................

24. ..................................



25.1. This is a ..................................

2. காலை வணக்கம் என்பதற்குரிய ஆங்கிலச்சொல் எழுதுக?
..................................

(10) வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக

26. "தயவுசெய்து உங்கள் புத்தகத்தை எனக்குத் தாருங்கள"
..................................

(11). 27,28,29 ஆகிய வினாக்களில் உள்ள வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக

27. I will bring stamps? ..................................

28. அம்மா உயல இவறத? ..................................

29. பிரகஸ்பதின்தா ..................................

(12). 30 - 51 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடு இடுக.

30. நீருடன் நன்கு கலக்கக் கூடியது திரவம் எது?
(01). மண்ணெண்ணெய் (02). வினாகிரி (03). பெற்றோல் (04). தேங்காயெண்ணெய்

31. நெத்தலியை உண்பதால் உடலுக்குக் கிடைக்கும் போசனைப்பொருள் எது?
(01). புரதம் (02). கொழுப்பு (03). விற்றமின் A (04). கல்சியம்

32. பின்வருவனவற்றுள் இரவில் இலை சுருங்கும் தாவரம் எது?
(01). முருங்கை (02). தாமரை (03). கறிவேப்பிலை (04). அகத்தி

33. தொல்பொருள் பெறுமதி மிக்கதாகவும் கலைத்துவப் பெறுமதி மிக்கதாகவும் உள்ள இடம் எது?
(01). எம்பிலிப்பிட்டியா (02). சிகிரியா
(03). கொத்மலை (04). விக்டோரியா

34. பூக்களின் உட்பாகங்கள் நிரப்பப்பயன்படும் தையல் எது?
(01). அடைப்புத்தையல் (02). நரம்புத்தையல் (03). சோம்தையல் (04). சங்கிலித்தையல்



35. மஞ்சள் நிறத்தையும் நிலநிறத்தையும் கலக்கும் போது உருவாகும் நிறம் என்ன?
(01). பச்சை (02). சிவப்பு (03). மஞ்சள் (04). கறுப்பு

36. இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு எது?
(01). 1.2.1948 (02). 4.2.1948 (03). 3.5.1972 (04). 4.6.1976

37. நாடாளுமன்றத்தைச் சுற்றி ஓடும் ஆறு எது?
(01). மகாவலிகங்கை (02). களுகங்கை (03). மாணிக்ககங்கை (04). தியவன்ன

38. தாதுசேனன் கட்டுவித்த குளத்தின் பெயர் என்ன?
(01). மின்னேரியாக்குளம் (02). பராக்கிரமபாகு சமுத்திரம் (03). கலாவாவி (04). திஸாவாவி

39. இலங்கையை சுனாமி தாக்கிய ஆண்டு எது?
(01). 2006.12.26 (02). 2004.12.20 (03). 2004.10.24 (04). 2004.12.26

40. பின்வருவனவற்றுள் விலங்கால் பரவும் வித்து எது?
(01). துத்திரிப்புல் (02). முருங்கை (03). வேங்கை (04). அல்லி


41. ஆடையிற் படிந்த தார்க்கறையை நீக்குவதற்கு உகந்தது எது?
(01). வெந்நீர் (02). மதுசாரம்
(03). எலுமிச்சம்பழச்சாறு (04). மண்ணெண்ணெய்

42. தாய்ப்பூனை குட்டியை வாயால் தூக்கிச் செல்லக் கௌவுவது குட்டியின்
(01). பாதங்களை (02). காதுகளை (03). கழுத்துப்பகுதியை (04). கால்களை

43.




இக்குறியீடு குறித்து நிற்பது
(01). வாகனங்களை நிறுத்த வேண்டாம்
(02). பாதுகாப்பற்ற புகையிரதக்கடவை
(03). பாதசாரிகளுக்கான கடவை
(04). முன்னே வலப்பக்க வளைவு உண்டு




44. தரப்பட்டுள்ள உருவில் உள்ள காந்தத்தின் பெயர் யாது?
(01). சட்டக்காந்தம் (02). பரியிலாடக் காந்தம்
(03). ஊசிவடிவக்காந்தம் (04). குண்டுமுனைக்காந்தம்

45. துருப்பிடித்த ஆணி குத்தியவருக்கு தாமதமின்றிக் கொடுக்கக்கூடிய மருந்து எது?
(01). கொத்தமல்லி (02). மரமஞ்சள் (03). வில்வம்பூ (04). ஆவரசம் பூ


46.



இவ் உபகரணத்தின் பெயர் யாது?
(01). மின்குமிழ்
(02). மின்காந்தம்
(03). மின் இணைப்பு
(04). தொடர்இணைப்பு

47. பௌர்ணமி தினம் தோன்றி 8ஆம் நாள் வருவது?
(01). அட்டமி (02). பௌர்ணமி (03). அமாவாசை (04). தசமி

48.



இங்கு சூரியஒளி உள்ள வேளையில் கிளையைப் பொலித்தீன் உறை ஒன்றினுள் இட்டு அதன் வாயைக் கயிற்றினால் இறுக்கக்கட்டிவைத்துச் சில மணித்தியாலயங்களின் பின் உறையினை அவதானிக்கும் போது பின்வரும் செயற்பாடு நடைபெற்றது. இங்கு நடைபெற்ற செயற்பாடு
(01). ஒளிமுறிவு
(02). ஒளித்தொகுப்பு
(03). ஒளிகடத்தல்
(04). ஒளித்தெறிப்பு

# பொது அமைப்புக்களின் கைகளிலேயே கிராம அபிவிருத்தி தங்கியுள்ளது

## வேலணை பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு



ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது அப் பகுதியில் இயங்கும் பொது அமைப்புக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. அதேநேரம் அப் பகுதியில் வசிக்கும் மக்களின் கல்வி வளர்ச்சி, அபிவிருத்தி உட்பட பல தரப்பட்ட மக்கள் பணிகளில் சனசமூக நிலையங்கள் அதி முக்கிய பங்கு வகிக்கின்றன.

இவ்வாறு வேலணை பிரதேச சபையின் தவிசாளரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சி.சிவராசா (போல்) தெரிவித்தார்.

அம்பிகைநகர் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச திணைக்களங்கள் ஒரு பிரதேசத்துக்கு வருகின்றபோது அப் பகுதியில் இயங்கும் ஒரு சனசமூக நிலையத்தின் பிரதிநிதிகளைத் தான் அணுகுகின்றனர்.

அந்தளவுக்கு ஒரு பிரதேசத்தின் அனைத்து விதமான வேலைத் திட்டங்களுக்கும் அதிக பங்கு வகிப்பது சனசமூக நிலையங்கள்.

எனவே எமது பிரதேசத்தில் இருக்கின்ற சனசமூக நிலையங்கள் முறையாக இயங்கி வந்தாலும் கூட இனிவரும் காலங்களில் இன்னும் திறப்பட இயங்கி எமது பிரதேசத்தின் கல்வி, அபிவிருத்தி மற்றும் ஏனைய தேவைகளை நிறைவு செய்வதற்கு முன்னின்று உழைக்க வேண்டும். எனவே தான் எமது பிரதேசம் ஏனைய பிரதேசங்கள் மாதிரி அனைத்து விடயங்களிலும் முன்னேற்றம் கண்டு, இங்கு வாழும் மக்களும் வாழ்வாதாரத்தில் ஒரு திடமான நிலையை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்றார்.

இந் நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் நிலையத்தின் உறுப்பினர்கள், அப் பகுதி மக்கள் எனப் பலதரப்பட்டோர் கலந்து கொண்டதுடன், 2015 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.



நாரகேன்பிட்டி மொத்த வர்த்தக களஞ்சிய சாலையிலிருந்து மீட்கப்பட்ட சிறிய ரக விமானம் இலங்கை விமானப்படையின் அருங்காட்சியத்துக்கு கொண்டு செல்லப்பட்ட போது....

# வவுனியாவிலிருந்து சேமமடுவுக்கு புதிய பேருந்துச் சேவை

இலங்கைப் போகுவரத்துச் சபை வவுனியாவில் இருந்து சேமமடு பகுதிக்கு புதிய பேருந்து சேவைகளை நேற்று ஆரம்பித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

வவுனியா பேருந்து நிலையத்தில் இந் நிகழ்வுகள் நேற்று காலை இடம்பெற்றன.

வவுனியாவில் இருந்து 25 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சேமமடு பிரதேசத்திற்கு நீண்டகாலமாக பேருந்து சேவை இடம்பெற்றிருக்கவில்லை. இதனால் மக்கள் பல்வேறு போக்குவரத்துச் சிரமங்களை எதிர் கொண்டு வந்தனர்.

இதன் காரணமாக தற்போது சேமமடுவுக்கு புதிய பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால இளமருதங்குளம், அலைகல் லுப் போட்டகுளம், சேமமடு உள்ளிட்ட 15 இற்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயன்பெறவுள் ளனர்.

கடந்த சனிக்கிழமை போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்துவ பண்டாரவினால் இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா டிப்போவுக்கு 8 பேருந்துகள் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மகிந்தவை பிரதமராக்கும் முயற்சி கைவிடப்படமாட்டாது

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் முயற்சிகள் கைவிடப்படமாட்டாது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி இரத்தினரபுரியில் மகிந்தவை பிரதமராக்கும் திட்டத்திற்கு ஆதரவு திரட்டும் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்க உள்ளனர்.

அண்மையில் கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றதிலும் அமுனுகம நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படுவதனை எதிர்த்து பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரத்தினபுரி கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.

# வாய்க்கால்கள் புனரமைக்க நல்லூர் பிரதேச சபை நிதி ஒதுக்கீடு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையின் 2015ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தின் கீழ், வாய்க்கால்கள் புனரமைப்புக்கு 2.7 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பா.வசந்தகுமார் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம், பிரதேச சபைக்கு உட்பட்ட 9 வாய்க்கால்கள் புனரமைக்கப்பட உள்ளன.

இதனடிப்படையில், கொக்குவில் பிரதேச சபையின் உப அலுவலக வாய்க்கால், திருநெல்வேலி வாழைக்குலை சந்தை வாய்க்கால், பூதவராயர் குள வாய்க்கால், பொற்பதி பிள்ளையார் வீதியிலிருந்து குளங்கரை வரையிலான வாய்க்கால், சம்பியன் வீதி பாலத்தில் இருந்து நந்தாவில் ஒழுங்கை வரையான வாய்க்கால், அம்பாள் சனசமூக நிலைய வாய்க்கால், கே.கே.எஸ். வீதி இராசாமில் வாய்க்கால், சபாபதி வீதி வாய்க்கால் ஆகிய வாய்க்கால்களே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

# யாழ். தமிழ்ச்சங்கத்தின் திருவள்ளுவர் விழா






(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த திருவள்ளுவர் விழா நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது.

யாழ். பெரியகடை சிவகணேசன் புடவையகத்தின் அனுசரனையில் இடம்பெற்ற இந்நிகழ்வு யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவரும் யாழ். பல் கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவருமாகிய பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் அனுசரணையாளரான கனகசபை அருள்நேசன் மங்கலவிளக்கேற்றினார். ஊர்காவற்றுறை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.தயாபரன் தமிழ் வணக்கம் இசைத்தார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சாந்தினி அருளானந்தம் வரவேற்புரையையும் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தொடக்கவுரையையும் ஆற்றினர்.

குறள் நீதி என்ற பொருளில் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் ந.விஜயசுந்தரம் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து தமிழ்ச்சங்கத் துணைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் சுழலும் சொற்போர் இடம்பெற்றது.


இக்கால உலகிற்கு வள்ளுவம் பெரிதும் வலியுறுத்துவது எது? என்ற பொருளில் இடம்பெற்ற இச்சொற்போரில் ஒழுக்கம் அல்ல கடமையே என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண்முகனும், கடமை அல்ல மனிதநேயமே என்ற பொருளில் யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவத் தொழில் நுட்பவியலாளர் லோ.துஷிகரனும், மனிதாயம் அல்ல உலகியலே என்ற பொருளில் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கௌரிமுகுந்தனும், உலகியல் அல்ல ஒழுக்கமே என்ற பொருளில் முல்லை. குமிழமுனை மகாவித்தியாலயத் தமிழாசிரியர் க.சந்திரசேகரும் கருத்துரைகளை வழங்கினர்.

சிறப்பு நிகழ்வாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர் சத்தியப்பிரியா கஜேந்திரனின் நெறியாள்கையில் நீர்வேலி பொன்சக்தி கலாலயா நாட்டியப் பள்ளியினர் வழங்கிய நாட்டிய நிகழ்வு இடம்பெற்றது. இதில் நட்டுவாங்கம் விரிவுரையாளர் சத்தியப்பிரியா கஜேந்திரன், பாட்டு அமிர்தலோஜனன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் விரிவுரையாளர் க.கஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினரும் நீர்ப்பாசனத்திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தருமாகிய ந.ஜங்கரன் நன்றியுரை நல்கினார். யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார்.

# தேவாலயங்களை குறிவைத்து பாகிஸ்தானில் தாக்குதல்

## 15 பேர் பலி; 80பேர் காயம்



பாகிஸ்தானில் 2 தேவாலயங்களில் தலிபான் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடாத்திய தற்கொலைப்படை தாக்குதலில் 2 பொலிஸார் உட்பட 15 பேர் உயிரிழநதனர். 80 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்துக்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், அதிபர் மம்னூன் ஹுசைன் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத் தலைநகர் லாகூரில் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் யூகனாபாத் பகுதியில் உள்ள ரோமன் கத்தோலிக்க தேவாலயம் மற்றும் கிறிஸ்ட் தேவாலளம் ஆகியவை நேற்று முன்தினம் தீவிர வாதிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

ஞாயிற்றுக்கிழமை என்பதால் இந்த தேவாலயங்களில் ஏராளமானோர் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் தேவாலயங்களில் நுழைய முயன்ற இருவரை அங்கிருந்த பொலிஸார் மற்றும் உள்ளூர் காவலர்கள் தடுத்து நிறுத்திய போது, அவர்கள் குண்டை வெடிகச் செய்ததாக கூறப்படுகிறது.

குண்டுவெடிப்பை தொடர்ந்து மக்கள் அலறியடித்துக் கொண்டு வெளியேற முயன்றதில் நெரிசலும் ஏற்பட்டது.

குண்டு வெடிப்பில் சிறுவர், சிறுமிகள், இரு காவலர்கள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர். பெண்கள், குழந்தைகள் உட்பட 80இறதும் மேற்பட்டோர் காயமடைநதனர். பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.


இதனிடையே குண்டுவெடிப்பை தொடர்ந்து, தீவிரவாதிகளுடன் வந்தவர்கள் என்று கூறப்படும் இருவரை ஒரு கும்பல் கடுமையாக தாக்கி உயிரோடு கொளுத்தியது. இருவரும் உடல் கருகி பலியாயினர்.

'தஹ்ரீக்-இ-தலிபான்' பாகிஸ்தான் என்ற அமைப்பில் இருந்து பிரிந்து செயற்படும் 'ஜமாத் உல் அஹ்ரார் என்ற அமைப்பு தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது.

இந்நிலையில் சிறுபான்மையினரை பாதுகாக்க பாகிஸ்தான் அரசு தவறிவிட்டது என்பதையே லாகூர் தாக்குதல் சம்பவங்கள் நிரூபிக்கின்றன என்று பாகிஸ்தான் சிறுபான்மையினர் கூட்டணியின் தலைவர் தாஹிர் நவீத் சவுத்ரி கண்டித்துள்ளார்.

பாகிஸ்தானில் சிறுபான்மை சமூகத்தினர் நீண்ட காலமாகவே தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றனர். 13இல் பெஷாவர் நகரின் கோஹதி கேட் பகுதியில் உள்ள ஆல் செயின்ட்ஸ் தேவாலயத்தில் நடந்த இரட்டை மனிதகுண்டு தாக்குதலில் 80பேர் கொல்லப்பட்டனர்.

# எபோலாவால் 10ஆயிரம் பேர் பலி




(ஜெனிவா)

எபோலா நோய்க்கு 10ஆயிரம் பேர் பலியாகி உள்ளதாக உலக சுகாதார அமைப்பு தகவல் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு தெரிவித்துள்ளதாவது மேற்கு ஆரிக்க நாடுகளான சியரா லியோன், கினி, லைபீரியா ஆகிய இடங்களில் ஓராண்டுக்கு முன் எபோலா நோய் தாக்கியது.இதுநாள் வரை 24,350 பேருக்கு இந்நோய் பாதிப்பு இருப்பது தெரியவந்துள்ளது. இதில் 10,004 பேர் பலியானதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

# தமிழக பா.ஜ.க.வில் 23இலட்சம் பேர் இணைவு

தமிழக பா.ஜ.க.வில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பு பணி, இம்மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதுவரையில், 23 இலட்சம் பேர், கட்சியில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், இம்மாத இறுதிக்குள், இது, 25 இலட்சத்தை எட்டும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், சேர்க்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்கள் எல்லோரும் உண்மையானவர்கள் தானா என்று பரிசோதிப்பதன் மூலம். அவர்களை கட்சியின் முழு நேரத் தொண்டர்களாகவும் மாற்ற முடியும் என, கட்சி மேலிடம் கருதுகிறது.அதன் அடிப்படையில், புதிய திட்டம் ஒன்றை, கட்சியின் தேசிய தலைமை அறிவித்துள்ளது. அது, உறுப்பினர் ஒவ்வொருவரையும் நேரில் சந்திக்கும் திட்டம். அதை எப்படி செயல்படுத்துவது என்பது குறித்து, தற்போது மேலிடம் ஆலோசித்து வருகிறது.

ஏப்ரல், மே மாதங்களில், நாடு முழுவதும் இதை அமுல்படுத்தும் நோக்கில், இதற்கான செயற்றிட்டத்தை வகுக்கும்படி, மாநில தலைமைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# ராகுலை உளவு பார்த்தமை குறித்து பொலிஸ் அதிகாரி விளக்கம்

காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தியை பொலிஸார் உளவு பார்த்ததாக எழுந்த சர்ச்சை தொடர்பாக டில்லி பொலிஸ் கமிஷனர் பி.எஸ்.பாஸ்ஸி உள்துறை இணை அமைச்சர் கிரண் ரிஜ்ஜுவிடம் விளக்கமளித்தார்.

கிரண் ரிஜ்ஜு, இவ்விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விளக்கமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 12ஆம் திகதி டில்லியில் உள்ள ராகுல் காந்தி அலுவலகத்துக்கு பொலிஸார் சென்று விசாரித்து வந்துள்ளனர். இதற்கு காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# உக்ரைனுக்கு எதிரான போர் தயாராக இருந்தது ரஷ்யா

## ஜனாதிபதி புடின் தெரிவிப்பு



உக்ரைனுக்கு எதிராக அணு ஆயுத போருக்கு ரஷ்யா தயார் நிலையில் இருந்ததாக அதிபர் விளாடிமர் புடின் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவின் ராஸியோ செய்தி தொலைக்காட்சி, உக்ரைன் - ரஷ்யா உள்நாட்டு பிரச்சினை குறித்து கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட ஆவணத்தை நேற்று முன்தினம் ஒளிபரப்பியது.

இதில், உக்ரைனில் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலின்போது ரஷ்ய அரசு மேற்கொண்டிருந்த நிலை குறித்தும் பல முடிவுகள் குறித்தும் வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ரஷ்யாவுக்கு ஆதரவாக இருந்த உக்ரைன் நாட்டு முன்னாள் தலைவர் விக்டர் யனுகோவிச்சின் உயிரை காப்பாற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளர்ச்சியாளர்களிடமிருந்து யனுகோவிச்சுக்கு அச்சுறுத்தல் இருந்ததால் தனது உயிரை காப்பாற்றிக்கொள்ள அவர் ரஷ்யாவின் உதவியை நாடியதாக ரஷ்ய அரசின் அந்த ஆவணப் படத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும், அந்தப் படத்தில் பேசும் ரஷ்ய அதிபர் விளாடிமர் புடின், கடந்த ஆண்டு கிரைமியா மோசமான நிலைக்கு தள்ளப்பட இருந்தது.

அந்த சமயத்தில் மேற்கத்திய நாடுகளை எதிர்த்தும் நாங்கள் கிரைமியா மக்களுக்கு துணை நின்றோம். அதோடு அல்லாமல். "எந்த நபரும் இல்லையென்றால், பிரச்சினையும் இல்லை என்ற நிலைப்பாட்டில் நாங்கள் இருந்தோம். அதன்படி உக்ரைனுக்கு எதிரான அணுஆயுத போருக்கு ரஷ்யா தயார் நிலையில் இருந்தது" என்று புடின் குறிப்பிட்டுள்ளார்.


# பிரேஸில் ஜனாதிபதிக்கு எதிராக 10 இலட்சம் பேர் போராட்டம்



பிரேஸில் நாட்டின் அதிபராக டில்மா ரூசோப் பதவி வகித்து வருகிறார். பெண் ஜனாதிபதியான இவர் கடந்த 2011ஆம் ஆண்டு முதன் முறையாக பதவியேற்றார். அதைத்தொடர்ந்து சமீபத்தில் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் 2ஆவது முறையாக பதவி வகித்து வருகிறார்.

தற்போது அவர் பதவியேற்று 5 மாதமே ஆன நிலையில் பிரேஸில் நாட்டின் பொருளாதார நிலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இலஞ்ச ஊழல் தலை விரித்தாடுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. எனவே டில்மா ரூசோப் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக வலியுறுத்தி நேற்று முன்தினம் எதிர்க்கட்சிகள் போராட்டம் நடாத்தின. அதில், ரூசோப்பின் ஆளுங்கட்சிக்கு ஆதரவு கொடுக்கும் கட்சிகளும் கலந்து கொண்டன.

# துடிப்பின்றி இயங்கும் இதயம் விஞ்ஞானிகளால் கண்டுபிடிப்பு



(சிட்னி)

இயந்திரத்தின் மூலம் இயங்கும் அதிநவீன இலத்திரனியல் இதயத்தை அவுஸ்ரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த இதயம் துடிக்காது. ஆனால் இரத்த ஓட்டத்தை உடல் முழுவதும் சீராக எடுத்துச் செல்லும் சக்தி வாய்ந்தது.

இதை பிரிஸ்பேனை சேர்ந்த பொறியியலாளர் டாக்டர் டேனியல் டிம்ஸ் வடிவமைத்துள்ளார். இந்த இதயத்தை செம்மறி ஆட்டுக்கு பொருத்தி வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளார். இத்திட்டத்துக்கான பணியை கடந்த 2001ஆம் ஆண்டில் குவின்ஸ் லேண்ட் தொழில் நுட்ப பலகலைக் கழகத்தில் தொடங்கினார். இதற்கு 'பிவாகர்' என பெயரிடப்பட்டுள்ளது.

இயந்திர இலத்திரனியல் இதயத்தில் சிறிய பிளேடு டிஸ்க் உள்ளது. இது நிமிடத்துக்கு 2 ஆயிரம் தடவை சுழன்று துடிப்பின்றி உடல் முழுவதும் இரத்தத்தை பாய்ச்சும் திறன் படைத்தது.

கடந்த ஜனவரி மாதத்தில் பிரிஸ்பேன், டெக்காஸ், சிட்னி மற்றும் மெல்பேன் நகரங்களை சேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்கள் செம்மறி ஆட்டின் இதயத்தை அகற்றிவிட்டு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குரிய அளவிலான இயந்திர இலத்திரனியல் இதயத்தை பொருத்தி வெற்றிகரமாக சோதித்தனர்.

இதே முறையில் மனிதர்களுக்கும் இந்த இதயத்தை பொருத்த முடியும் என நம்புகின்றனர். இன்னும் 3 ஆண்டுகளில் மனிதர்களிடம் இதற்கான சோதனை முயற்சி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் வியூகம் என்ன?

## உள்ளிருந்து கசியும் தகவல்கள்

(கொழும்பு)

கடந்த தடவை பொதுத் தேர்தலை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமனம் பெற்ற எம்.ஏ.சுமந்திரன் விரைவில் நடைபெறவிருக்கும் பொதுத தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்திலிருந்து களமிறங்க இருக்கின்றார். அதற்கான முன்னேற்பாடு, முஸ்தீபுகளில் அவர் ஈடுபட்டு வருகின்றார்.

இதேவேளை, சட்டத்துறை விடயங்களில் அதிக பரிச்சயம் மிக்கவரும் கொழும்பு பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளருமான வி.ரி.தமிழ்மாறனையும் இந்தத் தடவை யாழ். மாவட்டத்தில் களத்தில் இறக்குவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தீவிரமாக சிந்தித்து வருகின்றது எனத் தெரிகின்றது.

கடந்த தடவை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பட்டியலில் தீவுப் பகுதி சார்பில் இரா.சிவச்சந்திரன் போட்டியிட்டார். அவர் தேர்தலில் தெரிவாக இல்லை. அவர் வேலணைப் பகுதியைச் சேர்ந்தவர். அவரது இடத்துக்கே இம்முறை புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட வி.ரி.தமிழ்மாறனைக் களமிறக்குவதற்கு ஆலோசிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னேற்பாடாக, தீவுப் பகுதியின் ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியின் இலங்கை தமிழரசுக் க்ட்சியின் கிளை ஊடாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு கோரிக்கை கட்சித் தலைமைப் பீடத்திடம் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

தீவுப்பகுதியின் சார்பில் இம்முறை வி.ரி.தமிழ்மாறனை களமிறக்கக் கோரும் இக்கடிதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்றுறைக் கிளைத் தலைவர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரனே ஒப்பமிட்டுள்ளார் எனவும் தெரிகின்றது.

வி.ரி.தமிழ்மாறனின் மூத்த சகோதரர் அமரர் நாவேந்தன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகராக விளங்கியவர். உச்ச நெருக்கடி காலத்தில் கட்சியை விட்டுக் கொடுக்காது பணியாற்றியவர் நாவேந்தன்.

பல தரப்பினாலும் உயிர் அச்சுறுத்தல் விடப்பட்ட சமயத்திலும் கட்சியின் சார்பில் யாழ். பிரதி மேயராகப் பணியாற்றியவர். அரசமைப்புச் சட்ட விடயங்களில் வி.ரி.தமிழ்மாறன் நன்கு பரிச்சயம் உள்ளவர் என்பதால் அவரது பங்களிப்பு நன்கு உதவும் என இரா.சம்பந்தன் கருதுகின்றார் எனத் தெரிகின்றது.

இதேவேளை எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. வடமராட்சி கிழக்கை மையமாக வைத்து தேர்தலில் களமிறங்கும் ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார். அப்பகுதியைச் சேர்ந்த கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அவருக்கான களப் பணியை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் தெரிகின்றது.

இதேசமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இப்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் யாழ். மாவட்ட எம்.பி.க்கள் அனைவருக்குமே அடுத்த தேர்தலில் இடம் கொடுக்கப்பட வேண்டும் என்று கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன் கருதுகின்றார். இவர்களுள் விநாயகமூர்த்தி எம்.பி. சற்று நோய் வாய்ப்பட்டுள்ளார்.

எனினும் அடுத்த தேர்தலிலும் தமக்கு இடமளிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்புகின்றார் எனவும், அந்த விருப்பம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் அழுத்தம் திருத்தமாகத் தெரிவிக்கப்பட்டிருகின்றது என்றும் அறிய வருகின்றது.

இதேசமயம், கடந்த முறை யாழ். தேர்தலில் போட்டியிட்ட சீ.வி.கே.சிவஞானம் இப்போது வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவராக உள்ளார்.

அதேபோல பொ.ஐங்கரநேசன் மாகாண அமைச்சராகவுள்ளார். இவர்களுக்கு இடமளிப்பதில் கூட்டமைப்புத் தலைமை அதிக விருப்பம் காட்டவில்லை எனத் தெரிகின்றது.

இதேசமயம், ஒன்றரை வருடங்களுக்கு முன்னர்தான் நடந்து முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பொதுத் தேர்தலில் இடமளிப்பதிலும் கூட்டமைப்புத் தலைமைக்கு அதிக விருப்பம் இல்லை என்று தெரிகின்றது.

புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் வடக்கு மாகாண சபை உறுப்பினராக உள்ளார். அவரும் மற்றொரு மாகாண சபை உறுப்பினரான அனந்தி சசிதரனும் இம்முறை பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் களமிறங்கும் இலக்கைக் கொண்டுள்ளனர் எனத் தெரிகின்றது.

இவர்களுள் சித்தார்த்தன், கூட்டமைப்பில் தமது புளொட் கட்சிக்கு உரிய “கோட்டா” மூலம் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற முயலக்கூடும். ஆனால் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு பொதுத் தேர்தலில் இடமளிப்பதில்லை, அந்தப் பதவியில் அவர்களின் சேவை தொடரட்டும் என்ற காரணத்தைக் காட்டி அனந்திக்கு இடமளிக்காமல் இலங்கைத் தமிழரசுக் கட்சி அவரை வெட்டிவிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், அப்படி ஒரு தீர்மானத்தை இலங்கை தமிழரசுக் கட்சி எடுக்குமானால் வன்னி மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் இலக்கை வைத்து காய் நகர்த்தி வரும் வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கத்துக்கு அது பெரும் இக்கட்டாய் போய்விடும்.

அவரைப் பொதுத் தேர்தலில் களமிறக்கினால் நல்ல ஒரு சுகாதார அமைச்சரை வடக்கு மாகாண சபை இழந்துவிடுமே என்று கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறினார் எனவும் அறிய வந்தது.

## மீண்டும்...

அதிகமான மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டதன் பின்னர் அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டு, கண்டெடுக்கப்பட்டிருந்த மனித எலும்புக் கூடுகள் தொடர்பான பரிசோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

இதனையடுத்து, இந்தப் பிரதேசத்தில் அகழ்வு வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று காணாமற் போனவர்கள் சார்பிலான சட்டத்தரணிகள் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை அகழ்வு பணிகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருப்பதாக நீதிமன்றத்தில் தோன்றி வாதிட்ட சட்டத்தரணிகளில் ஒருவராகிய விவேகானந்தன் புவிதரன் தெரிவித்தார்.

அதேவேளை, முன்னர் அகழ்வு வேலைகள் இடம்பெற்ற பகுதியில் காணப்பட்ட பாழடைந்த கிணறு ஒன்று முழுமையாக மூடப்பட்டுள்ளதாகவும், அந்தக் கிணற்றின் உள்ளேயும் மனித எலும்புக் கூடுகள் இருக்கலாம் என்ற சந்தேகம் தெரிவிக்கப்பட்டு, அந்தக் கிணறு இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து, அதனையும் தோண்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காணாமற் போயுள்ளவர்களின் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் நீதிமன்றத்திடம் கோரியிருந்தனர்.

இதனையடுத்து அந்தக் கிணறு இருந்த இடத்தைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது, அத்துடன் இந்தக் கிணறு சம்பந்தமாக கோரிக்கை விடுத்திருந்த சட்டத்தரணிகளும் அந்த இடத்தைச் சென்று பார்வையிடுவதற்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இதனையடுத்து, அந்தப் பகுதிக்குச் சென்ற சட்டத்தரணிகளினால் அந்தக் கிணறு இருக்குமிடத்தைக் கண்டறிய முடியாதிருந்ததாகவும் அங்கு மழை வெள்ளம் தேங்கியிருந்ததனால், கோடை காலத்தில் அதனைக் கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரன் தெரிவித்தார். இந்த வழக்கில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் உள்ளிட்ட சட்டத்தரணிகளும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

## காணாமற்...

தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவிற்கு இதுவரை 20,000 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

## தேர்தல்....

இதன்போது தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் கட்சிகளின் பிரதிநிதிகளிடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

நீண்ட நேரம் எதிரும் புதிருமான கருத்துக்கள் விவாதிக்கப்பட்ட போதிலும். தீர்மானங்கள் எதுவும் எட்டப்படாமல் அக்கூட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை அனைத்துக் கட்சிகளினதும் பிரதிநிதிகள் இன்று மீண்டும் கூடி புதிய தேர்தல் முறை குறித்து ஆராய்வது என தீர்மானிக்கப்பட்டது.

## மாணவி மீது...

மாணவி கடந்த சனிக்கிழமை காணாமற் போயிருந்தார்.

பாடசாலையில் நடக்கவுள்ள விளையாட்டுப் போட்டிக்காக பயிற்சியில் ஈடுபட்டிருந்த குறித்த மாணவியை அவரது ஒன்று விட்ட சகோதரன் ஒருவர் ஆட்டோவில் குறிப்பிட்ட மாணவியை அழைத்துச் சென்றிருந்தார் என்றும், இதன்பின்னர் மாணவி குறித்த தகவல் எதுவும் தெரியாத நிலை காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டது.

இந்நிலையில் குறித்த மாணவி மயக்கமடைந்து அநாதரவாக யாழ்ப்பாணம் கோட்டைக்கு அண்மையான வீதியில் கிடந்துள்ளார். அநாதரவாகக் கிடந்த மாணவியை அப்பகுதிக்குச் சென்றவர்கள் கண்டு யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

வைத்திய பரிசோதனைகளில் அவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை தெரிய வந்தது. இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ள மானிப்பாய் பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (25)

## உள்ளக...

மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் நடத்தும் விசாரணைகளின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னரே இலங்கையின் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

போர்க் குற்றம் தொடர்பிலான உள்நாட்டு விசாரணை ஒரு மாத காலத்திற்குள் ஆரம்பிக்கப்படும் என வெளியான தகவல்கள் குறித்து இந்திய ஊடகம் ஒன்று வினவிய போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் நடத்தும் விசாரணைகள் தொடர்பான அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்ட பின்னர் அதில் குற்றம் சுமத்தப்படும் நபர்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் நடத்தும் விசாரணைகளின் இறுதி அறிக்கை எதிர்வரும் 25 ஆம் திகதி ஜெனிவா மனித உரிமை பேரவையில் தாக்கல் செய்யப்படவிருந்தது. எனினும் அரசாங்கத்தின் கோரிக்கையையடுத்து அது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## விக்கி மீது...

விடயத்தையும் சம்பந்தனிடம் குறிப்பிட்டார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நீங்கள் முதிர்ந்த, மூத்த அரசியல் தலைவர். இந்தப் பிராந்தியத்தில் எல்லோராலும் மிகவும் மதிக்கப்படும் ஓர் வழிகாட்டி. உங்கள் சொல்லிலும் உரைகளிலும் அந்த முதிர்ச்சி வெளிப்படுகின்றது.

ஆகையால் உங்கள் தலைமையின் கீழ் தமிழர்கள் ஒரு தீர்வை நோக்கி நகர்ந்து, அதை எட்டுவது சாத்தியமாகும். ஆனால் இதே போக்கை உங்கள் பக்கத்தில் உள்ள ஏனைய மூத்த தலைவர்களும் பிரதிபலிக்க வேண்டும். அதைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றாராம் இந்தியப் பிரதமர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அண்மைக்கால உரைகள், செயற்போக்குகள் இந்தியாவை மட்டுமல்ல, கூட்டமைப்புத் தலைமையையே கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரையே ஆச்சரியத்துக்குள்ளும் விசனத்துக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் திடீர் தீவிரப் போக்குக்கும், பேச்சுக்களுக்கும், உரைகளுக்கும் என்ன காரணம், யார் காரணம் என்பதை விசாரித்து அறிவதில் இரா.சம்பந்தன் அதிக ஈடுபாடு காட்டி வருகின்றார் எனத் தெரிகின்றது. இந்தச் சூழலில் நரேந்திர மோடியின் குத்தல் பேச்சு அவர் நேரடியாக பெயர் குறிப்பிடாவிட்டாலும் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் போக்குப் பற்றியதே என்று சம்பந்தர் தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறியிருக்கிறார் என அறிய வருகிறது.

## இரகசிய...

முன்னாள் ஜனாதிபதியின் ஊழல்கள் தொடர்பாகவும் அமைச்சர்களின் ஊழல்கள் தொடர்பாகவும் விசாரிக்க குழு அமைத்துள்ளார்கள்.

ஆனால், இரகசிய முகாம்கள் தொடர்பான விசாரணைகளை உரிய முறையில் நடத்தாது இராணுவத் தளபதியும் கடற்படைத் தளபதியும் அவ்வாறான முகாம் இல்லை எனக் கூறினர். எனவே, அவ்வாறான இரகசிய முகாம்கள் இல்லை என பிரதமரும் நீதியரசரும் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

திருகோணமலையில் கோட்டாபய எனும் பெயர் கொண்ட இரகசிய தடுப்பு முகாம் இருந்தது. அதில் 700 பேர் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது அவ்வாறான முகாம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் முன்னர் இருந்தது. இதற்கான சாட்சியங்கள் என்னிடம் உண்டு. முழுமையான விசாரணைகள் நடத்தப்பட்டு சாட்சியங்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டால் சாட்சியங்களை முற்படுத்துவேன்.

அந்த முகாம் தொடர்பிலும் அந்த முகாமில் இருந்தவர்கள் யார்? அவர்கள் இப்பொழுது எங்கே? எதற்காக தடுத்து வைக்கப்பட்டு இருந்தார்கள்? போன்ற கேள்விகளுக்கு விடையையே நாங்கள் கோருகிறோம்.


இறுதி யுத்தத்தின் போது பேருந்துகளில் 20 ஆயிரம் பேர் ஏற்றிச் செல்லப்பட்டு காணாமற் போயுள்ளார்கள். அவர்களை ஏற்றிச் சென்றதை அவர்களுடைய உறவினர்கள் நேரில் கண்டுள்ளார்கள்.

எனவே, இந்த விடயங்களை முன்னைய அரசாங்கம் போல் மூடி மறைக்க முயலாமல் அது தொடர்பான பூரண விசாரணையை புதிய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

அதனை விடுத்து கடற்படையிடம் கேட்டோம்,. இராணுவத்தினரிடம் கேட்டோம் அவர்கள் அவ்வாறான முகாம்கள் இல்லை என்கிறார்கள். எனவே, அவ்வாறான முகாம் இல்லை என்ற பதிலை நாங்கள் எதிர்பார்க்கவில்லை என மேலும் தெரிவித்தார்.

# எமது இறையாண்மையை இந்தியாவிடம் தாரைவார்க்க முடியாது

## டில்லி மீது திஸ்ஸ சீற்றம்



இந்தியாவின் தேவைக்கு இலங்கையில் அதிகாரத்தை பரவலாக்கவும் முடியாது. அந் நாட்டுக்கு எமது நாட்டின் இறை யாண்மையை தாரை வார்க்க வும் முடியாது என கடுமையாக இந்தியாவை சாடும் முன்னாள் அமைச்சரும், சமசமாஜ கட்சித் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண

திருகோணமல்லயை இந்தியா வுக்கு வழங்கியமை எதிர்காலத் தில் பயங்கரமான விளைவு களை ஏற்படுத்த வழிவகுக்கு மென்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண எம்.பி. மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

13ஆவது திருத்தம் இந்தியா வின் தேவைக்காக எம் மீது பலாத்காரமாக திணிக்கப்பட்டது. அந்த நாட்டைப் போன்று இங்கு அதிகாரத்தை பரவலாக்க முடி யாது. எமது நாட்டுக்கென ஒரு அரசியல் வரையறை உள்ளது. அதற்கமையவே அதிகார பரவ லாக்கல் இடம்பெற வேண்டும்.

எனவே பிரதமர் மோடி எமக்கு யோசனைகளை முன்வைக்க லாம். ஆனால் 13 ஐ தான் அமுல்படுத்த வேண்டுமென அழுத்தம் கொடுக்கும் அதிகாரம் அவருக்கு கிடையாது.


நாம் இந்தியாவுக்கு அடி மைப்பட வேண்டிய அவசியம் இல்லை. உலகில் இன்று பொரு ளாதாரத்தில் சீனா இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது. எனவே கடந்த ஆட்சியில் சீனா விடம் உதவி பெற்று பல அபி விருத்திகள் மேற்கொள்ளப்பட் டன. இதில் தவறேதும் இல்லை. இதனை பொறுத்துக்கொள்ள முடியாததன் காரணமாகவே இந் தியா அமெரிக்காவுடன் இணைந்து கடந்த ஆட்சியை கவிழ்த்து ஐ.தே. கட்சி ஆட்சிக்கு வித் திட்டது.

தெற்காசியாவில் அமெரிக்கா வின் பலத்தை அதிகரிக்க செய்து சீனாவை ஓரம் கட்டும் முயற்சியை மோடி மேற் கொண்டு வருகிறார். அதற்காகவே இங்கு விஜயம் செய்தார். ஒரு நாட்டின் எரிபொருள் தொடர் பான ஆதிக்கம் அந்நாட்டு அரசிடமே இருக்க வேண்டும். ஆனால் இன்று திருகோண மலை இந்தியாவிடம் தாரை வார்க்கப்பட்டு எரிபொருள் ஆதிக்கமும் அந்நாட்டுக்கு வழங் கப்பட்டுள்ளது.

இது எதிர்காலத்தில் எமது நாட்டில் பாரிய பயங்கரமான சூழ் நிலைகளை ஏற்படுத்தும். இலங் கையின் தேசிய பாதுகாப்பிற் கும் அச்சுறுத்தலாக அமையும். இந்தியாவுக்கு நாம் அடிமைப் படும் நிலைமை தோன்றும் என் றும் பேராசிரியர் திஸ்ஸ விதா ரண எம்.பி. தெரிவித்துள்ளார்.

# விடைபெறும் நேரம் சிந்திக்கிறாரா பாப்பரசர்?

## உள்ளக் கிடக்கை வெளிக்கிளம்புகிறது



ஆண்டவர் என்னை சிறிது காலத்துக்கே வத்திக்கானுக்கு அனுப்பினார். இதனால் நான் ஒரே ஒரு பெட்டியுடனேயே உரோமுக்கு வந்தேன். நான் 4 அல்லது 5 வருடங்களுக்கே பாப்பரசராக இருக்க முடியும். முன்னாள் திருத்தந்தை பென டிக்ட் பதவி விலகியமை தைரிய மான செயலாகும் - இவ்வாறு புனித பாப்பரசர் பிரான்சிஸ் தான் பதவி விலகக்கூடும் என்பதைக் குறிப்பால் உணர்த்தி யிருக்கிறார்.

மெக்ஸிக்கோவின் டெலி விசியா தொலைக்காட்சிக்கு அவர் வழங்கிய நேர்காண லிலேயே இந்த செய்தியை அவர் தெரிவித்தார். இந்த நேர் காணலில் தான் ஒரு பங்குத் தந்தையாக முகம் தெரியாமல் மக்களுக்கு செய்து வந்த சேவையை திருத்தந்தை பதவி யேற்ற பின்னர் இழந்தார் என் றும், பாப்பரசராக இருக்க வயது ஓர் தடையல்ல என்றும் மேலும் தெரிவித்தார். அத்துடன் யாருக் கும் தெரியாமல் உரோமில் இருந்து வெளியேறி ஒரு உண வகத்தில் பிட்சா சாப்பிட வேண் டும் என்ற ஆவல் தமக்கு இருக் கிறது எனவும் அவர் அந்த நேர் காணலில் குறிப்பிட்டார்.

# பேசாலைக் கடலில் விமானத்தின் பாகம்

## மீன்பிடி வலையில் சிக்கியது




மன்னார் பேசாலைக் கடலில் இருந்து விமானத்தின் காற்றாடி ஒன்று மீனவர்களினால் கண்டு பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸா ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ்.குருநகர் பகுதியைச் சேர்ந்த 3 மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேசாலை கடலில் மீன்பிடிப்பதற்கு சென் றுள்ள்னர். அப்போது, மீனவர் களிடம் குறித்த காற்றாடி சிக்குண்டுள்ளது. மீனவர்கள் குறித்த காற்றாடியினை படகில் குருநகருக்கு கொண்டு வந்து நேற்று பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த காற்றாடியினை கொண்டுவந்த மீனவர்களிடம் பொலிஸார் வாக்குமூலம் எடுத் துள்ளதுடன், காற்றாடி தொடர் பான விசாரணையினை மேற் கொண்டு வருகின்றனர். (25)

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு; பெண்களின் எண்ணிக்கை சரிவு

2013ஆம் ஆண்டு வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புக்காக சென்ற பெண்களின் எண்ணிக்கையைவிட 2014ஆம் ஆண்டு வெளிநாட்டுக்கு சென்ற பெண்களின் எண்ணிக்கை 6.04 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக தகவல்கள் தெரிவிக்கின்றன. 2013ஆம் ஆண்டு வேலைவாய்ப் புக்காக வெளிநாடு சென்ற பெண்களின் எண்ணிக்கை 118,061 ஆகும். எனினும் இந்த எண்ணிக்கை, கடந்த ஆண்டு 7,569ஆல் குறைவடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

# ஆசியாவின் அபிவிருத்தி யதார்த்தங்கள் பல்கலைக்கழகத்தில் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகை கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் அவர்களின் சேவையைக் கௌரவித்துத் தொகுக்கப்பட்ட "ஆசியாவின் அபி விருத்தி யதார்த்தங்கள்" நூல் நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக பொரு ளியல்துறை தலைவர் எஸ்.எஸ். உதயகுமார் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

பதிப்பாசிரியர் கலாநிதி செ. சந்திரசேகரம் அவர்களால் தொகுக்கப்பட்ட தமிழ் இலக் கியங்களின் பெண்களின் குணங்கள், வடக்கின் வசந்தங் கள் சிறுகதை தொகுப்பும் அன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்பட்டன.

பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி விஜிதா ரவிசங்கரின் வரவேற்புரையைத் தொடர்ந்து துணைவேந்தர் பேரா சிரியர் செல்வி வசந்தி அரசரட் ணம் ஆசியுரை வழங்கினார்.

வாழ்த்துரையை வவுனியா வளாக முதல்வர் க. அருள் வேள் வழங்கினார்.

அரசறிவியல்துறை தலைவர் பேராசிரியர் ஏ.வி. மாணிக்க வாசகர் சிறப்புரை வழங்கினார், சிரேஷ்ட மாணவ ஆலோசகர் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் தோழமையுரை நிகழ்த்தினார். வெளியீட்டு உரையை வணிக கற்கை பீடாபதிதி பேராசிரியர் தி. வேல்நம்பி வழங்கினார். நூலின் முதற் பிரதியை விஞ் ஞான பீடாதிபதி பேராசிரியர் எஸ். ஸ்ரீகற்குணராசா பெற்றார்.

நூலின் மதிப்பீட்டுரையை வவுனியா வளாக முன்னாள் முதல்வர் பேராசிரியர் இ. நந் தகுமாரன் வழங்கினார்.

ஏற்புரையை பேராசிரியர் வி.பி. சிவநாதன் வழங்கினார். பதிப்பாசிரியர் உரையை கலா நிதி செ. சந்திரசேகரம் வழங் கினார்.

பொருளியல் துறையில் விரி வுரையாளரான சிரேஷ்ட விரி வுரையாளராக, துறைத் தலை வராக பீடாதிபதியாகா, பேராசிரி யராக உயர்வு பெற்ற பேராசிரி யர் வி.பி. சிவநாதனின் பன்முக சேவை, கல்வி சேவையை பாராட்டி பொன்னாடை போர்த்தி மாலையணிவித்து பாராட்டி னர். (92)

# விபத்தில் சிக்கி பள்ளி மாணவன் பலி

(இரத்தினபுரி)

இரத்தினபுரி - காவத்தையில் நேற்று இடம்பெற்ற விபத்தில் தமிழ் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹவுப்பே தமிழ் வித்தியால யத்தில் கல்வி பயிலும் 6 வயதான சிறுமியொருவரே இவ் வாறு உயிரிழந்துள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

தெல்வலயிலிருந்து காவத்தை நோக்கி பயணித்த பஸ் ஒன்றில் சிக்கியே சிறுமி உயிரிழந்துள்ளார்.

பஸ்ஸின் சாரதி தற்போது கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப் பிட்ட னர்.

# உறவினருக்கு உயர் பதவி ரவி மீது கண்டனம்

(கொழும்பு)

இலங்கை காப்புறுதிக் கூட் டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்காவின் மைத் துனரை (மனைவியின் சகோ தரர்) நியமித்தமைக்கு தேசிய ஊழியர் சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

போதிய கல்வித் தகைமை கள் அற்ற, சாதாரண பொலிஸ் உத்தியோகத்தரான மேற்படி நபருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக மூன்று இலட்சம் ரூபா மாதமொன்றுக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருப்ப தாகவும் ஊழியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

# சுனந்த தேசப்பிரிய விபத்தில் சிக்கி காயம்



சுவிட்சர்லாந்தில் வசித்து வரும் இலங்கையின் சிரேஷ்ட ஊடக வியலாளர் சுனந்த தேசப்பிரிய, விபத்தொன்றில் படுகாய மடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கால் இடறி விழுந்ததால் இவ்விபத்து ஏற்பட்டதாக சுனந்த தேசப் •பிரிய இணையத்தள மொன்றிடம் தெரிவித்துள்ளார்.

விபத்தால் முதுகின் கீழ்ப் பகுதியில் பலமான அடி பட்டுள் ளதாகவும், 1995ஆம் ஆண்டு இலங்கை பெந்தர பகுதியில் இனவாதிகள் சிலர் மேற் கொண்ட தாக்குதலில் முள்ளந் தண்டு பகுதியில் சேதம் ஏற்பட்டிருந்ததில்,அந்த இடத்தில் தற்போது அந்த வலி உக்கிர மடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு வாழ்க்கைக்கு விடைகொடுத்து, எதிர்வரும் 27ஆம திகதி தான் நாடு திரும்பவிருந்த நிலையில், பூரண குணமடையும் வரை நடக்க வேண்டாம் என வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளதால் தனது இலங் கைப் பயணம் பிற்போடப்பட் டுள்ளதாகவும் சுனந்த தேசப் பிரியதெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.